# MPEDA
## நியூஸ் லெட்டர்

தொகுப்பு 1/எண். 1/ ஜனவரி 2018



திரு. மனோகர் பரீகர், மாண்புமிகு முதலமைச்சர், கோவா, 21'வது இந்திய கடல் உணவுக் கண்காட்சியைத் துவக்கி வைக்கின்றார்

# கோவாவில் நடைபெற்ற இந்திய சர்வதேச கடல் உணவுக் கண்காட்சி மகத்தான வெற்றி




திரு. சுரேஷ் பிரபு, மாண்புமிகு மத்திய வர்த்தகம் & தொழில்துறை மற்றும் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர், எம்.பி.இ.டி.ஏ.வின் ஏற்றுமதி வெகுமதி வழங்கும் நிகழ்ச்சியில் பிரதிநிதிகளுக்கு உரையாற்றுகின்றார்

# உள்ளே...

தொகுப்பு 1/எண். 1/ ஜனவரி 2018

கவர் ஸ்டோரி



03

கோவாவில் நடைபெற்ற இந்திய சர்வதேச கடல் உணவுக் கண்காட்சி புதிய அலைகளை உருவாக்கியுள்ளது

25

துறைமுகங்களில் மீன் வரத்தின் சிறப்பம்சங்கள்



33

சுற்றுச்சூழலுக்கேற்ற நிலையான இறால் வளர்ப்பு பயிற்சி



38

வெப்ப மண்டல இறால் வளர்ப்பு: இந்தியாவிற்கு வளம் தரும் தொழில்



32

கர்நாடகா மத்சிய மேளாவில் எம்.பி.இ.டி.எ



35

குண்டூர் ராஜுபங்காரு பாலேம் கிராமத்தில் பயிற்சி முகாம்



37

எம்.பி.இ.டி.எ. - சுவிட்சர்லாந்தின் கோஆப் இணைந்து நடத்தும் ஆர்கானிக் மீன் பண்ணை

MPEDA
தொகுப்பு 1/எண். 1/ ஜனவரி 2018
நியூஸ் லெட்டர்



**ஆசிரியர் குழு**

**திரு. T. டோலா சங்கர், IOFS**
இயக்குனர் (மார்க்கெட்டிங்)

**திரு. B. ஸ்ரீகுமார்**
செயலாளர்

**திருமதி. ஆஷா C. பரமேஸ்வரன்**
இணை இயக்குனர் (தரக்கட்டுப்பாடு)

**திரு. P. அனில்குமார்**
இணை இயக்குனர் (மீன்வளம்)

**திரு. K.V. பிரேம்தேவ்**
துணை இயக்குனர் (எம்.பி)

**முனைவர். T.R. ஜிபின்குமார்**
துணை இயக்குனர் (அபிவிருத்தி)

ஆசிரியர்

**முனைவர். M.K. ராம்மோகன்**
இணை இயக்குனர் (மார்க்கெட்டிங்)

உதவி ஆசிரியர்


**திருமதி. K.M. திவ்யா மோகனன்**
முதுநிலை எழுத்தர்

இதழாக்க உதவி

**பிவேல்டு கார்ப்பொரேட் சொல்யூஷன்ஸ் பி லிட்.**
166, ஜவஹர் நகர், கடவந்தரா,
கொச்சி, கேரளம், இந்தியா 682 020
Phone: 0484 2206666, 2205544
www.bworld.in, life@bworld.in

வடிவமைப்பு

**ரோபி அம்பாடி**



www.mpeda.gov.in
support@mpeda.gov.in

**கடல்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்திற்காக அச்சிட்டு வெளியிடுபவர்**

திரு. பி.ஸ்ரீகுமார், செயலாளர்,
கடல்பொருள் ஏற்றுமதி மேம்பாட்ட ஆணையம்
(வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகம், இந்திய அரசு)
எம்.பி.இ.டி.எ. ஹவுஸ், பனம்பிள்ளி நகர்,
கொச்சி - 682 036, தொலைபேசி : 0484-2311979

**வெளியிடுவது**

எம்.பி.இ.டி.எ. ஹவுஸ், பனம்பிள்ளி அவென்யு,
கொச்சி - 682 036.

**அச்சகம்**

பிரிண்ட் எக்ஸ்பிரஸ்,
44/169 எ, அசோகா ரோடு,
கலூர், கொச்சி - 682 017.





**Dr. ஏ. ஜெயத்திலக்**
தலைவர்


அன்பு நண்பர்களே,

21வது இந்திய சர்வதேச கடல் உணவுக் கண்காட்சி சிறந்த முறையில் ஒருங்கமைக் கப்பட்டதுடன் பார்வையாளர்களைக் கவர்ந்தது மட்டுமில்லாமல் பலரது பாராட்டையும் பெற்றது. ஒவ்வொரு கண்காட்சியாளர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும், கோவா மாநில அரசு, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம், கடல் உணவு ஏற்றுமதியாளர் சங்க உறுப்பினர்கள், மற்றும் இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் நான் எனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.ஐ.எஸ்.எஸ். நிகழ்வைத் தொடர்ந்து எம்.பி.இ.டி.எ. வட அமெரிக்காவின் போஸ்டன் நகரில் நடைபெறவுள்ள கடல் உணவு எக்ஸ்போ, 40 ஏற்றுமதியாளர்களுடன் கலந்து கொள்ள உள்ளது. இந்தக் கண்காட்சி வட அமெரிக்காவில் நடைபெறும் முக்கியமான கடல் உணவு கண்காட்சியாகும். இது போலவே, நீண்டகாலமாக கடல் உணவு ஏற்றுமதியில் இருந்துவரும் வர்த்தகம் தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் விதத்தில் குழு ஒன்று, ரஷ்யா செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. புரூசல்ஸ்சில் நடைபெறவிருக்கும் கடல் உணவு எக்ஸ்போ குளோபல் என்ற நிகழ்ச்சியிலும் ஏராளமான ஏற்றுமதியாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

எம்.பி.இ.டி.எ. சமர்ப்பித்த பிரதான் மந்திரி கௌசல் விகாஷ் யோஜனா என்ற திட்டத்தின் கீழ் கடல் உணவு பதப்படுத்தும் தொழிலாளர்களின் திறன் அபிவிருத்தி என்ற திட்டத்திற்கு அமைச் சகத்திலிருந்து ஒப்புதல் கிடைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய திறன் அபிவிருத்தி கார்ப்பரேசன், இந்த திட்டத்தை கடற்கரை சார்ந்துள்ள ஒன்பது மாநிலங்களில் செயல் படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் இதனை, பிரதான் மந்திரி கௌசல் விகாஷ் யோஜனா என்ற திட்டத்தின் முன்னதாகக் கற்றவற்றை அங்கீகரித்தல் என்ற பிரிவில் சேர்க்கவும் உள்ளது. எம்.பி.இ.டி.எ. இந்த திட்டத்தை கடல் சார்ந்த மாநிலங்களில் சுமார் 6000 கடல் உணவு பதப்படுத்தும் தொழிலாளர்களுக்கு 200 பயிற்சி வகுப்புகள் மூலமாக செயல் படுத்த திட்டமிட்டுள்ளது. இதற்கு பயிற்சி வழங்கவுள்ளவர்களுக்கு பயிற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எம்.பி.இ.டி.எ. பலவிதமான நடவடிக்கைகள் மற்றும் புதிய முயற்சிகளுக்குத் திட்டமிட்டுள்ளது. அவற்றை அடுத்த இதழில் விவரிப்பேன்.

நன்றி.


# கோவாவில் நடைபெற்ற இந்திய சர்வதேச கடல் உணவு கண்காட்சி புதிய அலைகளை உருவாக்கியுள்ளது



*திரு.மனோகர் பரீகர், மாண்புமிகு முதலமைச்சர், கோவா, 21வது இந்திய சர்வதேச கடல் உணவு கண்காட்சியைத் (ஐ.ஐ.எஸ்.எஸ்) 2018ஐ கோவாவில் துவக்கி வைக்கின்றார்*

21st INDIA INTERNATIONAL SEAFOOD SHOW 2018

# 21-வது இந்திய சர்வதேச கடல் உணவு கண்காட்சி 2018



இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் இந்திய சர்வதேச கடல் உணவுக் கண்காட்சியின் (ஐ.ஐ.எஸ்.எஸ்) 21வது கண்காட்சி, மூன்று நாள் நிகழ்ச்சியாக ஜனவரி 27-29, 2018 தேதிகளில் கோவாவிலுள்ள மார்கோவாவில் நடைபெற்றது. கடல் சார்ந்த துறையில் நடைபெற்ற கண்காட்சியின் முக்கிய மான பொருள் பாதுகாப்பான மற்றும் நிலையான மீன்வளர்ப்பு என்பதாகும். இதன் குறிக்கோள் இந்தியாவில் கடைப்பிடிக்கப்படும் மீன்பிடி முறைகள், மீன் வளர்த்தல் மற்றும் இதில் நிகழ்ந்துள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் கோடிட்டுக் காட்டுவதாகும்.

ஐ.ஐ.எஸ்.எஸ்2018 கோவாவில் மார்கோவாவிலுள்ள ஓபன் ஸ்போர்ட்ஸ் காம்ளக்ஸ்சில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் சட்டபூர்வ அமைப்பான கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (எம்.பி.இ.டி.எ) இந்திய கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் சங்கமும் (எஸ்.இ.எ.ஐ) இணைந்து நடத்திய இந்த நிகழ்ச்சிக்கு 12 நாடுகளிலிருந்து சுமார் 3000 பிரதிநிதிகளும், சுமார் 3500 வர்த்தகப் பார்வையாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்த ஐ.ஐ.எஸ்.எஸ் பத்தாண்டுகளுக்குப் பிறகு இந்திய மேற்குக் கடற்கரையை சந்திக்க வந்துள்ளது. இதனால் கிழக்குக் கடற்கரை பகுதிகளுடன் குறிப்பாக ஆந்திர மாநிலம் போன்ற மீன்பிடித் தொழிலில் சாதனை புரிந்து, கடலுணவு ஏற்றுமதிக்கு வலுவேற்றும் பகுதிகளுடன் கூடிய உறவைப் புதுப்பிக்க முடிந்தது.

திரு.சுரேஷ்பிரபு, மாண்புமிகு மத்திய வர்த்தகத்துறை அமைச்சர், நிகழ்ச்சியின் துவக்கவுரையில் பிரதிநிதிகளிடையே பேசும்போது மீன்வளர்ப்பதற்கு ஏதுவான இடங்களை செயற்கைக்கோள் படங்கள் மூலமாகக் கண்டறிந்து மீன் வளர்ப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் ஏற்றுமதி வளர்ச்சிக்கு மான விரிவான திட்டங்கள் எல்லா மாநிலங்களுக்குமாக அமைத்துத் தரப்படும் என்று உறுதியளித்தார்.

மேலும் அவர் கூறும் போது வர்த்தக அமைச்சகம் எம்.பி.இ.டி.எ. மற்றும் எஸ்.இ.எ.ஐ ஆகிய நிறுவனங்களை அனைத்து மாநிலங்களுக்கும் மீன்பிடித்தலுக்குத் தேவையான திட்டங்களை விளக்கமாகப் பட்டியலிட்டுத் தருமாறு கேட்டுக்கொள்ளும் என்று கூறினார்.

உள்நாட்டில் மீன் வளர்த்தலுக்கு அரசு முன்னுரிமை கொடுக்குமென்றும், நாட்டிலுள்ள 13 கடற்கரை சார்ந்த மாநிலங்களிலும் ஒருமித்து மீன்வளர்ப்பு அபிவிருத்திக்கான முறைகள் உருவாக்கப்படும் என்றார்.

கடல் உணவுத்துறையில் மீன்வளர்ப்புத் தொழில் என்பது பெரிய வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தரும் அமைப்பு மட்டுமல்ல, வேறு எதற்கும் பயன்படாத நிலையிலுள்ள நிலங்களை மீன்வளர்ப்பதற்கு பயன்படுத்தவும் வழிசெய்கிறது. உதாரண மாக, உப்பு நீர் நிலங்களை இதற்குப் பயன்படுத்தலாம். அடுத்த சில மாதங்களுக்குள் செயற்கைக்கோள் மூலமாக நில அமைப்புகளைக் கண்டறிந்து மீன்வளப்பதற்கான முறையான வழிமுறைகள் அனைத்தும் வகுக்கப்படும்.

நாங்கள் மாநிலங்களோடு இணைந்து செயலாற்றி பயன்படாத நிலங்களில் மீன்வளர்த்து ஏற்றுமதிக்கு வழிசெய்வோம் என்று அமைச்சர் கூறினார்.

இந்திய பொருட்களின் அபிவிருத்திக்காகவும், பிராண்ட் ஈக்விட்டி அமைக்கவும் அரசு உலகெங்கும் 10 மார்க்கெட்டிங் அலுவலகங்களை அமைக்க திட்டமிட்டுள்ளது.

ஏற்றுமதியாளர்கள், மாறிவரும் இந்த உலகத்தில் புதிய மார்க்கெட்களைக் கண்டறிய வேண்டும் என்றும், இன்றைய மார்க்கெட்டிங் என்பது பொருட்களை விற்பனை செய்வதில் மட்டும் கவனம் செலுத்துவதில்லை. பொருட்களின் தரம், முறையான பேக்கிங், பொருட்களின் நீடிப்புத் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கியதுதான் நவீன முறையில் சந்தைப்படுத்துதல் என்று அமைச்சர் கூறினார்.

Dr. எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. தலைவர்,எம்.பி.இ.டி.எ. பேசும் போது, இந்த நிறுவனம் உயர்ந்த மதிப்பூட்டப்பட்ட பொருட்களை விநியோகத் தொடர் மூலமாக அறிமுகம் செய்யவும், வெளிநாட்டுத் தேவைகளுக்கேற்ற தரமான பொருட்களை வழங்குவதிலும் கவனம் செலுத்தி வருகிறது என்று கூறினார்.

உண்பதற்குத் தயாரான பொருட்களை உற்பத்தி செய்யும் போது சுகாதார பாதுகாப்பு தொடர்பான சில தடையாணைகளுக்கு விளக்கம் தர வேண்டியுள்ளது. இதுபோன்ற பொருட்களைக் கையாளும்போது நோய் தாக்காத, கிருமிகள் இல்லாத பொருட்களை பயன்படுத்தி மட்டுமே பொருட்கள் தயாரிக்கப்படுகிறது என்பதை உறுதி செய்வது அவசியமாகும். அதேபோல், இந்திய கடல் உணவை சர்வதேச சந்தையுடன் இணைப்பதற்கு உயர்தரம் மற்றும் துவக்கம் கண்டறிதல் போன்ற நவீன யுக்திளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.


ஏற்றுமதியில் மீன்கள் உயிருடன் இல்லாத நிலையில், முடிந்தவரை புதியதன்மை மாறாத வகையில் பதப்படுத்தி அனுப்புவது அவசியமாகும். இறால் போன்ற மீன்களை இதுபோல அனுப்பினால் சர்வதேச சந்தையில் அதிகமான வரவேற்பும், அதிக வருமானமும் கிடைப்பது உறுதி.

கடல் உணவுவர்த்தகத்தில் இந்தியா மிகவும் உயர்ந்து வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இருபது சதவீதம் அல்லது அதன் இரட்டிப்பாக ஏற்றுமதியில் வளர்ச்சியை எட்டுவது என்பது நமக்கு பொருட்டே இல்லை. நமக்குள்ள வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்தினால் போதும் என்று கூறினார்.




***திரு.சுரேஷ் பிரபு, மாண்புமிகு மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் எம்.பி.இ.டி.எ.வின் ஏற்றுமதியாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சியின்போது பிரதிநிதிகளிடையே உரையாற்றும் காட்சி***






*திரு.மனோகர் பரீகர், மாண்புமிகு முதலமைச்சர், கோவா*

*ஐ.ஐ.எஸ்.எஸ்.2018 நினைவு மலர் வெளியீடு*

கோவா மாநிலத்தின் மாண்புமிகு முதலமைச்சர் திரு.மனோகர் பரிகார், வேளாண்துறை அமைச்சர் திரு.விஜய் சர்தேசாய், மீன் மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் திரு. வினோத் பலியேன்கர், மரு.எ.ஜெயத்திலக், இ.ஆ.ப. தலைவர் எம்.பி.எ.டி.எ. திரு.வி.பத்ம நாபன், தேசிய தலைவர், எஸ்.இ.எ.ஐ. திரு.பாபு காவ்லேகர், எதிர்கட்சித் தலைவர், கோவா, திரு.எம்.எம்.இப்ராஹிம், தலைவர், எஸ்.இ.எ.ஐ. கோவா, மற்றும் திரு.கே.ஹரிபாபு, பாராளுமன்ற உறுப்பினர், ஆகியோர் துவக்க விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

கண்காட்சியைத் துவக்கி வைத்துப் பேசிய கோவாவின் முதலமைச்சர் இந்தியாவின் மீன்வளம் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக அந்தமான் நிக்கோபார் கடல் பகுதி மற்றும் ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கு தேவையான வசதி கள் ஏற்படுத்தப்பட வேண்டும். தற்போதைய பிரச்சனைகளான கடல் நீரில் இரசாயன உரங்களின் எச்சம் கலப்பது, தற்போதுள்ள மீன்பிடிப் பகுதிகளை அளவிற்கதிகமாகப் பயன்படுத்துவது, மீன்களின் இனப்பெருக்க இடங்களைச் சேதப்படுத்துவது போன்ற பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும் என்று கூறினார்.

நீர் உயிரின வளர்ப்பில் ஆந்திராவின் வழிமுறைகளைப் பின்பற்றும் விதத்திலான பயிற்சியை மற்ற விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. தமது அறிமுக உரையில் 2016-17ல் இந்தியா 11,34,948 மெட்ரிக்டன் பனியில் உறைந்த இறால், மற்றும் இதர மீன்களை ரூ. 37,870.90 கோடி மதிப்பில் ஏற்றுமதி செய்திருந்தது. ஏப்ரல் - நவம்பர் 2017 காலகட்டத்தில் ஏற்றுமதி அளவில் 18.72 சதமும், மதிப்பில் 15.16 சதமும் அமெரிக்க டாலர் மதிப்பில் அதிகரித்திருந்தது.

நடப்பாண்டில் மீன் வரத்து அதிகரித்து இருப்பதாலும், சாதக மான சந்தை நிலவரம் இருப்பதாலும், ஏற்றுமதி அளவு, அமெரிக்க டாலர் மதிப்பில் ஆறு பில்லியனைத் தொடுமென எதிர்பார்க்கப்படுகிறது என்று எ.ஜெயத்திலக் கூறினார்.

மீன் உற்பத்தியில் நிலைப்புத் தன்மையையும், மதிப்பூட்டிய பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதிலும் நமது கவனத்தைச் செலுத்தினால் மீன் ஏற்றுமதியில் சீனாவிற்கு அடுத்த இரண்டாவது நிலையை இந்தியா எட்டுவதுடன், நார்வே, வியட்நாம், அமெரிக்கா, மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளை பின்னடையச் செய்ய இயலும் என்றும் கருத்து தெரிவித்தார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய கோவா மாநில அரசின் வேளாண்துறை அமைச்சர் திரு.விஜய் சர்தேசாய், பேசும்போது தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மீன் பிடித்தல் என்பது அளவிற்கதி கமாக நடைபெறும் காரணத்தால் மீன் பஞ்சம் ஏற்படாத வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சிறிய, அபிவிருத்தியடைந்து வரும் மாநிலமான கோவாவில் மீன் பிடிப்பதற்கு பாதகம் விளைவிக்கும் எல்.இ.டி விளக்குகளைப் பயன்படுத்துவதை தடை விதித்துள்ளதைப் போல் பெரிய மாநிலங்களும் நிலையான ஏற்றுமதி செய்வதில் ஆர்வம் இருந்தால் இதுபோன்ற கண்டிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திரு. வினோத் பலியேன்கர், கோவா மாநில மீன் மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் பேசும்போது மீன் ஏற்றுமதியை அதி கரிப்பதற்காகவும், உள்நாட்டு மக்களுக்கும் சகாயமான விலையில் தாராளமாகக் கிடைப்பதற்காகவும் கோவாவில் மீன் வளக் கழகம் அமைக்க திட்டமிட்டுள்ளதாக கூறினார்.

எஸ்.இ.எ.ஐயின் தேசியத் தலைவர், திரு.வி. பத்மனாபன் பேசும்போது கடல் உணவு உற்பத்தியாளர்களும், ஏற்றுமதி யாளர்களுக்கு இந்த வர்த்தகத்தில் நேரிடும் பிரச்சனைகளை எடுத்துக் கூறியதுடன், இப்போது நடைபெறும் ஐ.ஐ.எஸ்.எஸ். 2018 இவற்றுள் சிலவற்றுக்கான தீர்வுகளைத் தரும் என்று கூறினார்.

ஐ.ஐ.எஸ்.எஸ்.2018 கண்காட்சியில் இந்தியாவைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள், இயந்திரங்களை விநியோகம் செய்பவர்கள், இறக்குமதியாளர்கள், இதரத் தேவைகளை வழங்குபவர்கள், ஆராய்ச்சியாளர்கள்,கொள்கை வரைவாளர்கள்,

ஆகியோர்களுடன் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, சீனா, வியட்நாம், தென் கொரியா,தாய்லாந்து,மலேசியா,மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதி களும் ஐ.எஸ்.எஸ் 2018-ல் கலந்து கொண்டனர்.

இந்த கண்காட்சியில் 325 கண்காட்சிக் கூடங்கள் சுமார் 7000 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டிருந்தது. இவற்றில் நவீன தொழில்நுட்பத்தில் உருவான பேக்கிங் மெஷின்கள், குளிர்பதன அமைப்புகள், சோதனை செய்யும் கருவிகள், மற்றும் மீன்பிடித் தூண்டில்கள் போன்றவை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மேலும் பலதரப்பட்ட பாரம்பரியமிக்க கடல் உணவு வகைகளும், மதிப்பூட்டம் செய்யப்பட்ட பொருட்களும் காட்சியை அலங்கரித்தன.

### கோ ஆப், சுவிட்சர்லாந்துடன் ஒப்பந்தம்

ஐ.ஐ.எஸ்.எஸ்.சில் கடல் வர்த்தகத்துறையில் எடுத்துக்காட்டாக சுவிட்சர்லாந்திலுள்ள மிகப் பெரிய சில்லறை மற்றும் மொத்த விற்பனை நிறுவனமான கோ ஆப் கோஆப்பரேட்வுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. இதனால் இந்தியாவிலுள்ள விவசாயிகளையும், தொழில் முனைவர்களையும் ஊக்குவித்து ஐரோப்பிய யூனியன் மார்க்கெட்டிற்கான ஆர்கானிக் இரால் உற்பத்தி செய்ய வாய்ப்புகள் ஏற்படும்.



*திரு. வினோத் பலியேன்கர், மீன் மற்றும் நீர்வளத்துறை அமைச்சர், கோவா*

இந்த ஒப்பந்தத்தில் எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் Dr.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப.வும் கோஆப்பின் நிர்வாக உறுப்பினர் திரு.ஜெராட் ஜர்லுட்டர் ஆகியோர் கையெழுத் திட்டனர்.

இத்திட்டத்தின்படி எம்.பி.இ.டி.எ. தொழில்முனைவோர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி தேசிய மற்றும் சர்வதேச தரநிர்ணயங்களுக்குட்பட்டு உயர்தரமான ஆர்கானிக் இரால் உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகளை வழங்கும்.

கோ ஆப் சுவிட்சர்லாந்து முழுதுமாக சுமார் 2200 விற்பனை நிலையங்களையும், மொத்த விற்பனை / உற்பத்தி செயல்முறைகளை ஐரோப்பா முழுவதும் நடத்தி வருகிறது. மேலும் ஆர்கானிக் இராலை 15 சதவீதம் அதிக விலைக்கு வாங்கவும், கூடுதலாக ஐந்து சதவீதம் நிதியுதவி மற்றும் பயிற்சி உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளுக்கும் தர முன்வந்துள்ளது.

இதன் முன்னோடித் திட்டமாக கேரளத்தில் ஆர்கானிக் பிளாக் டைகர் இராலை சுமார் 1000 ஹெக்டேர் பரப்பில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தி ன் வெற்றியின் அடிப்படையில் இந்தியா முழுவதுமுள்ள பல இடங்களிலும் செயல் படுத்தப்படும்.

எம்.பி.இ.டி.எ. மற்றும் கோ ஆப் ஆர்கானிக் இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கான இறால் குஞ்சு பொரிப்பகத்திற்கான சான்று வாங்குவதற்கான வசதி களை செய்து தரும். அதே போல தீவனங்களைத் தயாரிக்கும் சிறிய அளவிலான தீவன ஆலைகளைத் தொகுத்து பட்டியலிட்டு இந்த திட்டத்திற்கான ஆர்கானிக் தீவனங்களைக் கொள்முதல் செய்யவும் ஏற்பாடு செய்யும்.

இது இந்தியாவில் மீன் வளர்ப்பில் புதிய பாதையை வகுப்பதாகும். இந்திய கடல் உணவு ஏற்றுமதிக்கு மட்டுமின்றி அதிக அளவிலான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், தரிசு நிலங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், உள் நாட்டின் வளங்களைப் பெருக்கி, நமது மற்றும் சர்வதேச மார்க்கெட்டிற்குத் தேவையான மீன்களை உற்பத்தி செய்ய வழிவகுக்கும்.

## எம்.பி.இ.டி.எ.வின் ஏற்றுமதி விருதுகள்

ஐ.ஐ.எஸ்.எஸ்.சின் துவக்க நாளின் போது திரு.சுரேஷ் பிரபு, 2015-16,2016-17 ஆண்டுகளில் ஏற்றுமதியில் சாதனை புரிந்த ஏற்றுமதியாளர்களுக்கு எம்.பி.இ.டி.எ.வின் விருதுகளை வழங்கினார். எம்.பி.இ.டி.எ. வருடாந்தர விருதுகளை ஏற்றுமதியில் சாதனை புரிந்தவர்களுக்கு 1990 முதல் வழங்கி வருகிறது. இது ஆழ்கடலில் மீன் பிடித்தல், நிலையான மீன்வளர்ப்பு, இணக்கம் மற்றும் பயிற்சி போன்ற ஐந்து பிரிவுகளில் முதல் இருவருக்கு இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

மத்திய வர்த்தக அமைச்சர் 2015-16,2016-17 ஆண்டுகளில் சாதனை புரிந்த 27 நிறுவனங்களுக்கு விருதுகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியின் போது கோவா மாநில அரசின் வேளாண்துறை அமைச்சர் திரு.விஜய் சர்தேசாய், மீன் மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் திரு. வினோத் பலியேன்கர், மற்றும் எம்.பி.இ.டி.எ.வின் உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு.ஹரிபாபு ஆகியோரும் உடன் இருந்தனர்.

### ஐ.ஐ.எஸ்.எஸ் 2020

இதில் நடைபெற்ற கருத்தரங்கின் போது ஐ.ஐ.எஸ்.எஸ்.சின் அடுத்த கண்காட்சி கொச்சியில்2020ல் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.



கோஆப்பின் நிர்வாக உறுப்பினர் திரு.ஜெராட் ஜுர்லுட்டர் மற்றும் எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் Dr.எ.ஜெயத் திலக் இ.ஆ.ப. ஆகியோர் ஆர்கானிக் இறால் ஏற்று மதிக்காகக் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைமாறிக் கொள்கின்றனர்



கோஆப்பின் நிர்வாக உறுப்பினர் திரு.ஜெராட் ஜுர்லுட்டர் மற்றும் எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் Dr.எ.ஜெயத் திலக் இ.ஆ.ப. ஆகியோர் ஆர்கானிக் இறால் ஏற்று மதிக்காகக் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுகின்றனர். இடது ஓரமாக இருப்பவர் திரு.அலெக்ஸ் நைனன், பேபி மெரைன் குரூப்

## தொழில்நுட்ப கருத்தரங்குகள்

ஐ.ஐ.எஸ்.எஸ்.2018 நடைபெற்ற மூன்று நாட்களிலும் கடல் உணவு பங்குதாரர்கள், திட்ட வரைவாளர்கள், மற்றும் பிற வல்லுனர்கள் பங்கேற்ற பல தலைப்புகளிலான விவாதங்கள் நடைபெற்றன. இதில் ஏற்றுமதியாளர்கள் தங்களது பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்ள ஏற்ற இடமாக அமைந்தது. ஜி.எஸ்.டி விசயத்தில் தெளிவான விளக்கங்கள் தேவை, பலவிதமான சான்றிதழ்கள் வழங்குவதில் வகைபடுத்தப்பட்ட விதிமுறைகள், டிலிஸ்டிங் செய்வதிலுள்ள பிரச்சனைகள் போன்றவை விவாதிக்கப்பட்டன.

இயூ-இந்தியா ஷிரிம்ப் நெதர்லாந் எம்பசியி-ன் ஆதரவோடு கருத்தரங்கின் நிறைவு நாளில் பல்வேறு விசயங்களில் ஆலோசனை நடத்தியது. இயூ சந்தைக்கு இறால் விநியோகம் செய்வதில் இந்தியா முதன்மை வகிக்கின்றது.

இந்த கருத்தரங்கின் போது இந்திய கடல் உணவு பங்குதாரர்கள் முக்கிய மான பிரச்சனை ஒன்றை முன்வைத்தனர். அதாவது வர்த்தகத்திற்காக பல்வேறு விதமான சான்றிதழ்களை, எடுக்க வேண்டியுள்ளது. இதனால் அதிகப்படியான செலவும், சுமையும் இருப்பதால் இவற்றை எளிமையாக்கி, வர்த்தகத்தில் நம்பகத்தன்மையை நிலைப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இது போன்ற பிரச்சனைகள் இருக்கும் போது, ஒரு சில நாடுகள் அந்த நாடுகள் வகுத்துள்ள விதிகளுக்கேற்ற சான்றிதழ்களை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும்போது அவற்றை சமாளிப்பது கடுமையாக உள்ளது. எனவே, சான்றிதழ்கள் பெறுவதில் பொதுவான நிலைப்பாடு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

பயன்பாட்டாளர்களைச் சென்றடையும் வரை சான்றிதழ்களின் பங்கு மிகவும் தேவையானது என்ற கருத்தில் பலரும் உடன்பட்டனர். திரு.சந்திரஜித், இயக்குனர், விம்பே லேப்பரட்டரிஸ், குவைத் கூறும்போது, சான்றிதழ்கள் பொருட்களின் தரத்தையும், நம்பகத்தன்மையை மட்டும் உறுதி செய்வ தில்லை. அவை பிராண்டுகளின் மீதான எதிர்பார்ப்பையும், ஒரு நிறுவனத்திற்கு நேர்மறையான பல விசயங்களையும் அமைத்துத் தருவதில் பெரும் பங்கு வகிக்கின்றன என்றார்.

மேலும் அவர் எச்.எ.சி.சி.பி. போன்ற சான்றுகள் இரசாயனம், உயிரியல், நேரடியான பிரச்சனைகள் தொடர்பான உணவுப் பாதுகாப்பை வழங்குவது,







ஐ.எஸ்.ஓ.9001: 2015, பிரிட்டிஷ் ரீடைல் கன்சார்ட்டியம் (பி.ஆர்.சி) மற்றும் பல சான்றிதழ்களின் முக்கியத்துவம் குறித்து பேசினார். ஐ.எஸ்.ஓ. 9001:2008 என்பது இப்போது செல்லாது என்றும் அதனை சான்றிதழ்களின் வரிசையிலிருந்து நீக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

திரு.யோசியுகி சிகி, சீனியர் எக்சிகியூட்டிவ், நிர்வாக இயக்குனர், ஜப்பான் ஃபிஷ்சரிஸ் அசோசியேசன், எக்கோ லேபலிங் தொடர்பாகப் பேசினார்.






மெரைன் எக்கோ லேபல்ஸ் என்பது மீன் பிடிக்கப்பட்ட விதத்தை விவரிப்பதாகும். இதனால் பயனீட்டாளர்களுக்கு ஒரு புரிதலையும், சுற்றுச் சூழலின் மீதான நிலைப்புத்தன்மையையும் எக்கோ லேபல் ஏற்படுத்தித் தரும் என்று கூறினார்.

திரு.சுகி மேலும் குறிப்பிடும் போது லேபல் செய்யப்படுவதன் அவசியமே மீன் உற்பத்தியாளர்களின் முயற்சிகளுக்கு மதிப்பளித்து, அவர்களது உற்பத்தியை அபிவிருத்தி செய்வதே ஆகும். இதுபோன்ற செயல்பாடுகளின் குறிக்கோள் மீன்வளத்துறைக்கென நிலையான எதிர்காலம் உருவாக வேண்டும் என்பதே ஆகும்.

பல விதமான தலைப்புகளில் நடைபெற்ற தொழில் நுட்பக் கருத்தரங்குகளில் பங்கேற்றதன் விளைவாக மத்திய மற்றும் மாநில அளவிலான வரிகளை எல்லாம் ஒன்றிணைத்து ஜி.எஸ்.டி என்ற பெயரில் ஒரே வரியாக்கியது ஒரு வழியில் நல்லது என்ற கருத்து உருவானது. இருப்பினும், ஜி.எஸ்டி. என்பதன் முழு விவரத்தை அறிந்து கொள்வது சிரம மாக உள்ளது என்றும் பிரதிநிதிகள் கருதினர்.

கடல் உணவு ஏற்றுமதியாளர்கள், மத்திய அரசு ஜி.எஸ்.டி தொடர்பான தனது விளக்கத்தைத் தந்தாலும், பலவிதங்களில் தங்களது வர்த்தகத்திற்குத் முட்டுக்கட்டையாகவே உள்ளது என்று கருதுகின்றனர்.

செலுத்திய வரியைத் திரும்பப் பெறும் வழிமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது என்று விளக்கமளித்தாலும், அது எப்போது கிடைக்கும் என்ற காலவரையறை இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. வேறுபல பிரச்சனைகளான மெர்ச்சண்ட் எக்ஸ்போர்ட்டர்களின் வேர்கவுஸ் பிரச்சனைகள் மற்றும் டிரா பேக் கிளைம்கள் தொடர்பானவை மத்திய ஜி.எஸ்.டி.யின் கண்காணிப்பில் வரும். மாநிலங்களின் கண்காணிப்பில் வராது.

இதுபோன்ற சந்தேகங்களுக்கு பதில் கூறிய வர்த்த சட்ட நிபுணரான திரு. கார்த்திக், ஐ.வி.ஆர்.என். ஏற்றுமதி தொடர்பான விசயங்களில் ஜி.எஸ்.டி.யில் பலதும் தெளிவற்ற நிலையில் உள்ளது என்றார். கடல் உணவு ஏற்றுமதியில் ஜி.எஸ்.டி.யைப் புரிந்து செயல்பட்டு ஏற்றுமதி இலக்கை எட்டுவது சிரமமானது. மத்திய அரசும், எம்.பி.இ.டி.எ. மற்றும் கடல் உணவு ஏற்றுமதியாளர்களின் சங்கமும் 2022 கால அளவில் சுமார் 10 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஏற்றுமதிக்கு இலக்கிட்டுள்ளனர்.

முனைவர்.சி.என்.ரவிசங்கர், இயக்குனர், மத்திய மீன் தொழில்நுட்ப நிறுவனம், கொச்சி, பேசும்போது, கடல் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தி, அவற்றின் நீடிப்புத்தன்மையை அதிகரிப்பதற்காக உருவாகியுள்ள நவீன தொழில் நுட்பங்களை எடுத்துக் கூறினார். இதனால் மீன் உற்பத்தி யாளர்களுக்கு உகந்த விலை கிடைக்க வாய்ப்புகள் ஏற்படும் என்பதைக் குறிப்பிட்டார்.

முனைவர். ஐ.கருணாசாகர், முதுநிலை இயக்குனர், (சர்வதேசத் தொடர்பு) நிட்டி பல்கலைகழகம், மங்களூரு, பேசும் போது முக்கியமான பெரிய சந்தைகளில் மேற்கொள்ள வேண்டிய கடல் உணவு பாதுகாப்பு நடவடிக்கைகளை விளக்கினார்.

திரு.லிம் மெங் ஹூட், முதன்மை செயலாக்க அதிகாரி, அப்போலோ அக்வாரியம், சிங்கப்பூர், சர்வதேச சந்தைகளில் உயிருடன் கூடிய மீன்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளதால், அதுபோன்ற விற்பனையை உறுதி செய்யும் விதத்திலான நவீன தொழில்நுட்பங்கள் கண்டறியப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார்.

*திரு.சுரேஷ் பிரபு, மாண்புமிகு மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் எம்.பி.இ.டி.எ.வின் சிறந்த ஏற்றுமதிக்கான 2015-16, 2016-17ஆம் ஆண்டுகளுக்கான விருதுகளை வழங்கினார்*























## ஐ.ஐ.எஸ்.எஸ்.2018ன் தொழில்நுட்ப கருத்தரங்குகள்

**கருத்தரங்கு 1 (27.07.2018 பிற்பகல்)**

| Chairman of the session: Dr. C. N. Ravisankar, Director, Central Institute of Fisheries Technology, Kochi | |
|---|---|
| **Topic** | **Speakers** |
| Key note address:<br>**Role of technology and value addition in seafood marketing** | Dr. C. N. Ravisankar, Director, CIFT, Kochi, India |
| Overview of seafood safety requirements in major markets | Dr. I. Karunasagar, Senior Director (International Relations), Nitte University, Mangaluru, India |
| GST implementation and its implication in seafood sector | Mr. Karthik IVRN, Lakshmikumaran & Sridharan, Chennai, India |
| Live transportation of edible shrimp and fish: international standards, specifications and requirements | Mr. Lim Meng Huat, Chief Operating Officer, Apollo Aquarium, Singapore |
| Use of e-commerce in international seafood marketing | Mr. Sanjay Sharma, Global Head, TDI International India (P) Limited, New Delhi, India |

**கருத்தரங்கு 2 (28.07.2018 முற்பகல்)**

| Chairman of the session: Mr. Elias Sait, Secretary General, Seafood Exporters Association of India | |
|---|---|
| **Topic** | **Speakers** |
| Key note address:<br>**Seafood marketing and certification** | Mr. Elias Sait, Secretary General, SEAI, Chennai, India |
| Value addition "Concept, Opportunities & Challenges" | Mr. Kenny Thomas, Chief Executive, Jinny Marine Traders, Veraval, Gujarat, India |
| Seafood demand & supply in international market: Price influencing factors | Mr. Allen, Managing Director of Iceland Seafood Barraclough Ltd (ISB), UK |
| Seafood certifications- A Boon or Bane? | Mr. Chandrajith, Director, Wimpey Laboratories, Kuwait |
| Japanese Eco - Labelling | Mr. Yoshiyuki Shige, Senior Executive, Managing Director, Japan Fisheries Association, Japan |


**கருத்தரங்கு 3 (28.07.2018 பிற்பகல்)**

| Theme: Seafood export trade: Challenges in meeting regulatory requirements | |
|---|---|
| **Chairman of the session: Dr. S.K. Saxena, Director, Export Inspection Council of India** | |
| **Topic** | **Speakers** |
| Key Note address | Dr. S. K. Saxena, Director, EIC |
| Export certification: Role of EIC in achieving regulatory Compliance | Mr. R. M. Mandlik, Deputy Director, Export Inspection Council |
| Challenges and opportunities for Indian seafood exports based on EU regulations | Mr. Wojciech Dziworski<br>Counsellor for Health and Food Safety<br>Delegation of the European Union to India |

| | |
|---|---|
| Challenges in meeting biosecurity measures in Seafood Trade | Dr. K.K. Vijayan, Director, ICAR - Central Institute of Brackish-water Aquaculture, Chennai |
| Challenges and opportunities for Indian Aquaculture Seafood Exports | Dr. A. Ravi Shankar, IPS, Director General Drugs & Copy Writes, Drug Control Administration, Andhra Pradesh |
| Challenges and opportunities for Indian seafood exports based on Australian regulations | Dr. Nora Galway,<br>Counsellor (Agriculture)<br>Australian High Commission, New Delhi |
| Seafood exports: Industry Perspective | Mr. Elias Sait, Secretary General SEAI |

**கருத்தரங்கு 4 (29.07.2018 முற்பகல்)**

| INDIA -EU SHRIMP DIALOGUE | |
|---|---|
| **Facilitator: Mr. Anand Krishnan, Deputy Agricultural Counselor, Embassy of the Kingdom of the Netherlands, New Delhi.** | |
| **Chairman of the session: Dr. A. Jayathilak IAS, Chairman, The Marine Products Export Development Authority, Kochi, India** | |
| **Topic** | **Speakers** |
| Welcome Address - Introduction to theme, word of thanks, intro Sol/ STIP, purpose and outcomes of the workshop | Mr. Willem Van Der Pijl<br>Solidaridad / Seafood Trade Intelligence Portal |
| Opening Address | Dr. A. Jayathilak IAS,<br>Chairman, MPEDA, India |
| Buyers perspective on Indian shrimp in the EU market (commercial perspective) | Mr. Frank Molenaar<br>Klaas Puul |
| EU DG SANTE Perspective on current developments with regard to audits | Mr. Wojciech Dzirowski<br>EU DG SANTE Representative, Delhi |
| Export Inspection Council perspective on current developments with regard to audits | Dr. S. K. Saxena,<br>Director, EIC of India |
| EU importers on current developments with regard to audits | Mr. Olivier Hottlet,<br>European Seafood Importers and Processors Alliance /<br>Dutch Fish Federation |
| Indian exporters on current developments with regard to audits | Mr. Elias Sait,<br>Secretary General, SEAI |
| EU-India grape example NL-India cooperation to prevent/lift EU ban | Mr. Wouter Verhey,<br>Agricultural Counselor, Embassy of the Kingdom of the Netherlands |
| Discussion: How to cooperate to let EU-India shrimp trade flourish | Mr. Willem Van Der Pijl<br>Director, Solidaridad SSEA |
| Closing remarks | Dr. M. K. Ram Mohan<br>Joint Director, MPEDA, India |
| Valedictory | Mr. Wouter Verhey,<br>Agricultural Counselor, Embassy of the Kingdom of the Netherlands |














### காட்சிக் கூடங்களுக்கான விருதுகள்

சிறந்த காட்சிக் கூடங்களுக்கான (வெளிநாட்டு) விருதுகளின் வரிசையில் வியட்நாமைச் சேர்ந்த ஆசியா ரெபிரிஜிரேசன் இண்டஸ்ட்ரி ஜாய்ண்ட் ஸ்டாக் கம்பெனிக்கு முதலாம் விருதும், குளோரி கம்பெனி லிமிடெட், வியட்நாமிற்கு இரண்டாம் விருதும் கிடைத்தது.

பதிவுசெய்த ஏற்றுமதியாளர்கள் வரிசையில் சிறந்த காட்சிக் கூடத்திற்கான விருதை காத்ரே மெரைன் எக்ஸ்போர்ட்ஸ் பி.லிட்.ற்கும், இரண்டாம் விருது கே.என்.சி.அக்ரோ லிமிட்டட் என்ற நிறுவனத்திற்கும் கிடைத்தது.

சிறந்த இந்திய காட்சிக் கூடத்திற்கான விருதை இஷிடா இந்தியா பிரைவேட் லிமிடட். பெற்றது. இரண்டாவது சிறந்த காட்சிக் கூடத்திற்கான விருதை பாரி கெமிக்கல்ஸ் பெற்றது.

இந்த விருதுகளை எம்.பி.இ.டி.எ.வின் தலைவர் Dr.எ.ஜெயத் திலக், இ.ஆ.ப. திரு.வி.பத்மநாபன், தலைவர். கடல் உணவு ஏற்றுமதி யாளர் அசோசியேசின் இந்தியா அவர்களின் முன்னிலையில் வழங்கினார்.

### ஐ.ஐ.எஸ்.எஸ். புராடக்ட் விருதுகள்

கடந்த 2016 ஐ.ஐ.எஸ்.எஸ்.சில் நடைபெற்றது போலவே உற்பத்தியான பொருட்களுக்கிடையே ஒரு போட்டி வைப்பதென ஐ.ஐ.எஸ்.எஸ் 2018லும் தீர்மானிக்கப்பட்டது. இது மூன்று பிரிவுகளில் புதிய பொருட்கள் அறிமுகமாக வேண்டும் என்ற நோக்கில் நடத்தப்பட்டது. அந்த மூன்று பிரிவுகள் பின்வருமாறு.

#### 1. சிறந்த வசதியான புராடக்ட்

இது கடல் உணவுப் பொருட்களுள் பயன்பாட்டாளர்கள் மிகவும் எளிதில் பயன்படுத்தக்கூடிய பொருட்களாக இருக்க வேண்டும்.

#### 2. சிறந்த ரீடைல் பேக்

கடல் உணவுப் பொருட்களை சில்லறை விற்பனை செய்வதற்காக சிறந்த முறையில் பேக்கிங் செய்திருக்க வேண்டும். இவை ஏற்கனவே பழக்கத்தில் இருப்பவையாகவும் அல்லது புதிய அறிமுகமாகவும் இருக்கலாம். இரண்டு கிலோ அளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் நல்ல தரத்துடனும் போட்டிக்கு




















திரு.மனோகர் பரீகர், முதலமைச்சர், கோவா,ஐ.ஐ.எஸ்.எஸ்.2018ன் கண்காட்சி தொகுப்புப் புத்தகத்தை வெளியிடுகின்றார்

***Dr.*எ.ஜெயத்திலக்,**
**தலைவர்,**
**எம்.பி.இ.டி.எ,**
**ஐ.ஐ.எஸ்.எஸ். 2018ல்**
**உரையாற்றுகின்றார்**










21st INDIA INTERNATIONAL SEAFOOD SHOW 2018












# 21st INDIA INTERNATIONAL SEAFOOD SHOW 2018




சிறந்த காட்சிக் கூடம்: வெளிநாடு - ஆசியா ரெஃப்பிரிஜெரேசன் இண்டஸ்டிரி ஜாய்ண்ட் ஸ்டாக் கம்பெனி




இரண்டாவது சிறந்த காட்சிக் கூடம்: வெளிநாடு - குளோரி கோ.லிட்




சிறந்த காட்சிக் கூடம்: பதிவு செய்த ஏற்றுமதியாளர்கள் - காத்ரே மெரைன் எக்ஸ்போர்ட்ஸ் பி.லிட்




இரண்டாவது சிறந்த காட்சிக் கூடம்: பதிவு செய்த ஏற்றுமதியாளர்கள் - கே.என்.சி.அக்ரோ லிட்




சிறந்த காட்சிக் கூடம்: இந்தியா - இஷிடா இந்தியா பி.லிட்



இரண்டாவது சிறந்த காட்சிக் கூடம்: இந்தியா - பாரி கெமிக்கல்ஸ்

## வெற்றியாளர்கள்

1. சிறந்த வசதியான புராடக்ட்




விருது பெற்றவர்: மசாலா மேக்ரீயல்: காத்ரே மெரேன் எக்ஸ்போர்ட்ஸ் பி.லி. ரத்னகிரி

3. சிறந்த புதுமையான புராடக்ட்




விருது பெற்றவர்: ஃபிஷ் சீக் கெபாப் : வெஸ்ட் கோஸ்ட் புரோசன் ஃபுட்ஸ்பி.லிட். மும்பை

2. சிறந்த ரீடைல் பேக்




விருது பெற்றவர்: புதிய திலோப்பியா மீன் இன்டாக்ட் பேக்கிங்கில்: வெஸ்ட் கோஸ்ட் புரோசன் ஃபுட்ஸ்பி.லிட். மும்பை



Dr.எ.ஜெயத்திலக், இ.ஆ.ப. தலைவர், எம்.பி.எ.டி.எ. ஐ.ஐ.எஸ்.எஸ்.2018ல் சிறந்த கண்காட்சிக் கூடம் மற்றும் சிறந்த உற்பத்திப் பொருட்களுக்கான விருதுகளைப் பெற்றவர்களுடன்

விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் இருக்க வேண்டும்.

**3. சிறந்த புதுமையான புராடக்ட்**

புதிய கடல் உணவு வகையாகவும், ஏற்கனவே விற்பனைக்கு கிடைப்பவையாகவும் அல்லது புதிய அறிமுகமாகவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் விற்பனைக்கு உகந்ததாக, நல்ல தரத்துடனும் போட்டிக்கு விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் இருக்க வேண்டும்.

## 2015-16 ஆண்டிற்கான ஏற்றுமதியாளர் விருது பெற்றவர்கள்

| CATEGORY | POSITION | AWARDEE |
|---|---|---|
| I.(A) Overall Exports – Value wise | 1st | M/s. FALCON MARINE EXPORTS LTD, BHUBANESWAR |
| | 2nd | M/s. DEVI SEA FOODS LTD, VISAKHAPATNAM |
| I.(B) Overall Exports- Quantity wise | 1st | M/s. MUKKA SEA FOOD INDUSTRIES PVT. LTD, MANGALORE |
| | 2nd | M/s. FALCON MARINE EXPORTS LTD, BHUBANESWAR |
| II. Commodity- wise | | |
| (A) Frozen Shrimp | 1st | M/s. FALCON MARINE EXPORTS LTD, BHUBANESWAR |
| | 2nd | M/s. DEVI SEA FOODS LTD, VISAKHAPATNAM |
| (B) Frozen Cephalopods | 1st | M/s. BLUE WATER FOODS & EXPORTS PVT. LTD, MANGALORE |
| | 2nd | M/s. GRAND MARINE FOODS, ALAPPUZHA |
| (C) Frozen Fin Fish | 1st | M/s. RAMESHWAR COLD STORAGE, VERAVAL |
| | 2nd | M/s. INDIAN MARINE INDUSTRIES, KOCHI |
| (D) Chilled Marine Products | 1st | M/s. AQUA WORLD EXPORTS PVT. LTD, CHENNAI |
| | 2nd | M/s. GOLDMARINE EXPORTS PVT. LTD, CHENNAI |
| (E) Dried Marine Products | 1st | M/s. MUKKA SEA FOOD INDUSTRIES PVT. LTD, MANGALORE |
| | 2nd | M/s. GLOBAL IMPEX TRADING, MUMBAI |
| (F) Molluscs other than Cephalopods | 1st | M/s. SEABOY FISHERIES PVT. LTD, TRIVANDRUM |
| | 2nd | M/s. CAPITHAN EXPORTING CO., KOLLAM |
| III. Live Marine Products other than Aquarium Fish | 1st | M/s. KANNAN MARINE FOODS, CHENNAI |
| | 2nd | M/s. SCANET TRADING PVT. LTD, CHENNAI |
| IV. Aquarium Fish | 1st | M/s. PESCINA INDICA, KOLKATA |
| | 2nd | M/s. ASIAN EXPORTS, KOLKATA |
| V. Special Efforts | | |
| (A) Value added products | 1st | M/s. ACCELERATED FREEZE DRYING CO. LTD., ALAPPUZHA |
| | 2nd | M/s. HIC-ABF SPECIAL FOODS PVT. LTD, ALAPPUZHA |
| (B) Woman Entrepreneur | 1st | M/s. VASAI FROZEN FOODS, THANE |

## 2016-17 ஆண்டிற்கான ஏற்றுமதியாளர் விருது பெற்றவர்கள்

| CATEGORY | POSITION | AWARDEE |
|---|---|---|
| I. (A) Overall Exports – Value wise | 1st | M/s. DEVI FISHERIES LTD, VISAKHAPATNAM |
| | 2nd | M/s. DEVI SEA FOODS LTD, VISAKHAPATNAM |
| I. (B) Overall Exports- Quantity wise | 1st | M/s. GADRE MARINE EXPORT PVT. LTD, RATNAGIRI |
| | 2nd | M/s. MUKKA SEA FOOD INDUSTRIES PVT. LTD, MANGALORE |
| II. Commodity- wise | | |
| (A) Frozen Shrimp | 1st | M/s. DEVI FISHERIES LTD, VISAKHAPATNAM |
| | 2nd | M/s. DEVI SEA FOODS LTD, VISAKHAPATNAM |
| (B) Frozen Cephalopods | 1st | M/s. PROFAND VAYALAT MARINE EXPORTS PVT. LTD, KOCHI |
| | 2nd | M/s. SILVER SEA FOOD, PORBANDAR |
| (C) Frozen Fin Fish | 1st | M/s. SILVER SEA FOOD, PORBANDAR |
| | 2nd | M/s. INDIAN MARINE INDUSTRIES, KOCHI |
| (D) Chilled Marine Products | 1st | M/s. AQUA WORLD EXPORTS PVT. LTD, CHENNAI |
| | 2nd | M/s. GOLDMARINE EXPORTS PVT. LTD, CHENNAI |
| (E) Dried Marine Products | 1st | M/s. MUKKA SEA FOOD INDUSTRIES PVT. LTD, MANGALORE |
| | 2nd | M/s. RAJ FISH MEAL & OIL COMPANY, UDUPI |
| (F) Molluscs other than Cephalopods | 1st | M/s. SEABOY FISHERIES PVT. LTD, TRIVANDRUM |
| | 2nd | M/s. JACKVIN SEAFOODS, CUDDALORE |
| III. Live Marine Products other than Aquarium Fish | 1st | M/s. KANNAN MARINE FOODS, CHENNAI |
| | 2nd | M/s. SCANET TRADING PVT. LTD., CHENNAI |
| IV. Aquarium Fish | 1st | M/s. MALABAR TROPICALS, KOLKATA |
| | 2nd | M/s. AQUATIC WORLD, MUMBAI |
| V. Special Efforts | | |
| (A) Value added products | 1st | M/s. GADRE MARINE EXPORT PVT. LTD, RATNAGIRI |
| | 2nd | M/s. ACCELERATED FREEZE DRYING CO. LTD, ALAPPUZHA |
| (B) Woman Entrepreneur | 1st | M/s. VASAI FROZEN FOODS, THANE |

# நவம்பர் 2017ல் இந்தியாவில் குறிப்பிட்ட துறைமுகங்களில் மீன் வரத்தின் சிறப்பம்சங்கள்


வினோத் எஸ். ரவிந்திரன், வி.வி.அஃப்சல், ஜோய்சி வி தாமஸ்
நெட்ஃபிஷ் – எம்.பி.இ.டி.எ



இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரைப் பகுதி களிலுள்ள முக்கியமான மீன்பிடித் துறைமுகங்களில் வந்த மீன்பிடிப் படகுகளின் வரத்துக்களை, நெட்ஃபிஷ், எம்.பி.இ.டி.எ.வின் மீன் பிடித்தலுக்கான சான்று முறைக்காக பதிவு செய்தது. நெட்ஃபிஷ் இந்தியா, ஒன்பது கடல் சார்ந்த மாநிலங்களில் அமைந்திருக்கும் சுமார் 47 முக்கிய துறைமுகங்களில் வந்து சேரும் மீன்களின் கணக்கைக் கவனித்து வருகிறது. (அட்டவணை-1). இவ்வாறு சேகரிக்கப்பட்ட விவரங்களை ஆய்வுசெய்து மீன்களை இன வாரியாகவும், மாநிலவாரியாகவும், துறைமுக வாரியாகவும் பிரித்து வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கை நவம்பர் 2017ல் இந்தி யாவின் முக்கியமான துறைமுகங்களில் வந்து சேர்ந்த மீன்களின் புள்ளிவிவரங்களைக் கூறுகிறது.

அட்டவணை 1: புள்ளிவிவரத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட துறைமுகங்கள் மற்றும் கரையிறங்கும் மையங்கள்


| Sl. No. | State | Fishing harbour |
|---|---|---|
| 1 | Kerala | Beypore |
| 2 | | Puthiyappa |
| 3 | | Thoppumpady |
| 4 | | Munambam |
| 5 | | Sakthikulangara |
| 6 | | Thottapally |
| 7 | | Kayamkulam |
| 8 | | Vizhinjam |
| 9 | Karnataka | Mangalore |
| 10 | | Malpe |
| 11 | | Gangoli |
| 12 | | Tadri |
| 13 | | Karwar |
| 14 | | Honnavar |
| 15 | Maharashtra | Harne |
| 16 | | New Ferry Wharf |
| 17 | | Ratnagiri (Mirkarwada) |
| 18 | | Sasson Dock |
| 19 | Gujarat | Veraval |
| 20 | | Porbandar |
| 21 | | Mangrol |
| 22 | West Bengal | Digha (Sankarpur) |
| 23 | | Deshapran |
| 24 | West Bengal | Namkhana |
| 25 | | Sultanpur |
| 26 | | Kakdwip |
| 27 | | Raidigi |
| 28 | Odisha | Paradeep |
| 29 | | Balaramgadi |
| 30 | | Bahabalapur |
| 31 | | Dhamara |
| 32 | Andhra Pradesh | Kakinada |
| 33 | | Machilipatnam |
| 34 | | Nizampatnam |
| 35 | | Visakhapatnam |
| 36 | Tamil Nadu | Chennai |
| 37 | | Pazhaiyar |
| 38 | | Nagapattinam |
| 39 | | Tuticorin |
| 40 | | Cuddalore |
| 41 | | Mandapam |
| 42 | | Chinnamuttom |
| 43 | | Colachel |
| 44 | | Pondicherry |
| 45 | | Karaikal |
| 46 | Goa | Cutbona |
| 47 | | Malim |

### கிடைத்த மீன்களின் அடிப்படையில் மதிப்பீடு

நவம்பர் 2017ல் தேர்வு செய்யப்பட்ட 47 துறைமுகங்கள் மற்றும் கரையிறங்கும் மையங்களில் சுமார் 1,04,988.48 டன் மீன் கிடைத்ததாக பதிவாகியுள்ளது. இதில் 54,485.10 டன் (52 சதவீதம்) ஆழ்கடல் மீன்பிடித்தலின் மூலமாகக் கிடைத்ததாகும். இதில் 25,499.46 டன் (24 சதவீதம்) கடலடிவாழ் மீன்களாகும், மீதியுள்ள 25,003.91 டன் (24 சதவீதம்) செல் ஃபிஷ் வகையைச் சேர்ந்தவையாகும். (வரை படம்.1) சுமார் 112 வகையான மீன்கள் இந்த மாதம் கிடைத்தன. அவற்றை வரிசைப்படுத்திய போது முதல் ஐந்து இடத்தில் இருப்பவை, சாலை, அயிலை, வாளை, கணவாய், மற்றும் ஊசிக்கணவாய் என்பனவாகும். இந்த ஐந்தும் சேர்ந்து மொத்த அளவில் 48 சதவீதமாகும். (வரை படம்:2) இவற்றுள் சாலை மீன் மட்டுமே அனைத்து இடங்களிலும் அதிகபட்சமாக 15,299.86 டன் அளவில் இருந்தது. இது மொத்த அளவில் 15




*வரைபடம் 1: நவம்பர் 2017ல் இனவாரியான மீன் வரத்து*




*வரைபடம் 2: நவம்பர் 2017ல் கிடைத்த முக்கியமான மீன்கள்*

சதவீதமாகும். இந்த ஐந்து வகைகளைத் தவிர அடுத்த நிலையில் இருந்தவை, சங்கரா மற்றும் குரோகர்ஸ் ஆகும். இவற்றின் பங்கு முறையே 4,347.56 டன், & 4,242.25 டன்களாகும். இம்மாதம் மிகக் குறைந்த அளவில் கிடைத்தது கெழுத்தி மீனாகும்.(0.27டன்)

இனம் மற்றும் அளவுப்படி வரிசைப்படுத்திய விவரத்தை அட்டவணை 2ல் காணலாம். ஆழ்கடல் மீன் வரிசையில் சாளை மீன் முதல் இடத்தையும், இதனைத் தொடர்ந்து அயிலையும், வாளையும் இருக்கக் காணலாம். கடலடி மீன் வகையில், புல்ஸ் ஐ, குரோக்கர்ஸ் மற்றும் சங்கரா வகை மீன்களாகும். ஷெல் ஃபிஷ் வகையில் கிடைத்தவையில் மொலுஸ்கேன் இனத்தைச் சேர்ந்த கணவாய், ஊசிக்கணவாய், ஆக்டோபஸ், ஆகியவை 64 சதவீதமும், மீதமுள்ள 36 சதவீதம் ஓட்டுமீன் வகையில் பினாயிட் இறால் அதிக அளவில் இருந்தாலும், கணுக்காலி இறால் அதிக அளவில் இருந்தது.(2,505.04 டன்)


*அட்டவணை 2: நவம்பர் 2017ல் இனவாரியான மீன்களின் பட்டியல்*

| Fish item | Qty. in tons | % of total catch |
|---|---|---|
| **Pelagic finfish** | | |
| Indian Oil Sardine | 15299.86 | 14.57 |
| Indian mackerel | 12191.80 | 11.61 |
| Ribbonfish | 7938.60 | 7.56 |
| Tunas | 3559.39 | 3.39 |
| Anchovies | 2423.10 | 2.31 |
| Lesser Sardines | 2325.99 | 2.22 |
| Seer Fish | 2052.48 | 1.95 |
| Bombay Duck | 2009.39 | 1.91 |
| Scads | 2005.71 | 1.91 |
| Dolphin fish | 1026.55 | 0.98 |
| Trevallys | 737.83 | 0.70 |
| Horse mackerel | 638.28 | 0.61 |
| Leather jacket | 482.95 | 0.46 |
| Barracudas | 436.71 | 0.42 |
| Herrings | 381.86 | 0.36 |
| Hilsa | 242.84 | 0.23 |
| Queen fish | 115.34 | 0.11 |
| Oriental Bonito | 98.60 | 0.09 |
| Sail fish | 84.74 | 0.08 |
| Marlins | 84.42 | 0.08 |
| Mullet | 71.97 | 0.07 |
| Indian ilisha | 56.11 | 0.05 |
| Barbed halfbeak | 54.70 | 0.05 |
| Flat needle fish | 38.99 | 0.04 |
| Cobia | 30.71 | 0.03 |
| Seabass | 27.77 | 0.03 |
| Needle fish | 21.90 | 0.02 |
| Rainbow runner | 17.86 | 0.02 |
| Indian salmon | 14.44 | 0.01 |
| Silver sillago | 10.84 | 0.01 |
| Milkfish | 1.90 | 0.00 |
| Indian thread fish | 1.50 | 0.00 |
| ***Total*** | ***54485.10*** | ***51.90*** |
| **Demersal finfish** | | |
| Bull's eye | 4991.75 | 4.75 |
| Croakers | 4447.01 | 4.24 |
| Japanese Thread fin bream | 4347.56 | 4.14 |
| Reef cods | 3022.96 | 2.88 |
| Lizard fish | 2156.21 | 2.05 |
| Cat fish | 1609.51 | 1.53 |
| Snapper | 1527.45 | 1.45 |
| Sole fish | 1440.87 | 1.37 |
| Pomfret | 1012.87 | 0.96 |
| Eel | 231.67 | 0.22 |
| Goat fish | 222.25 | 0.21 |
| Pony fish | 129.24 | 0.12 |
| Rays | 128.68 | 0.12 |
| Moon fish | 76.64 | 0.07 |
| Tiger perch | 39.68 | 0.04 |
| Glassy perchlet | 35.23 | 0.03 |
| Ghol | 31.10 | 0.03 |
| Sea breams | 23.45 | 0.02 |

| | | |
|---|---|---|
| Whip fin silver biddy | 7.65 | 0.01 |
| Indian halibut | 6.37 | 0.01 |
| Parrot fish | 5.60 | 0.01 |
| Black tip shark | 4.24 | 0.00 |
| Spine foot | 1.20 | 0.00 |
| Spotted butter fish | 0.27 | 0.00 |
| ***Total*** | ***25499.46*** | ***24.29*** |
| **Shellfish** | | |
| *Crustaceans* | | |
| Penaeid shrimps | 8280.97 | 7.89 |
| Sea crab | 643.51 | 0.61 |
| Mud crab | 108.13 | 0.10 |
| Lobsters | 16.17 | 0.02 |
| Non-penaeid shrimps | 1.20 | 0.00 |
| *Total Crustaceans* | 9049.98 | 8.62 |
| *Molluscs* | | |
| Cuttlefish | 7878.87 | 7.50 |
| Squid | 6580.24 | 6.27 |
| Octopus | 1494.83 | 1.42 |
| *Total Molluscs* | 15953.93 | 15.20 |
| Total Shellfish | 25003.91 | 23.82 |
| ***GRAND TOTAL*** | ***104988.48*** | ***100.00*** |

வடமேற்கு, தென்மேற்கு மற்றும் வடகிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் ஆழ்கடல் மீன்கள் இதர இரண்டு இனங்களைவிட அதிகமாக இருந்தது. அதேபோல, தென்கிழக்குப் பகுதியில் ஷெல்ஃபிஷ் அதிகமாக இருந்தது. (வரைபடம்-4) வடகிழக்குப் பகுதியைத்தவிர மற்ற இடங்களில் கடலடிவாழ் மீன்களின் வரத்து குறைவாக இருந்தது.


அட்டவணை 3ல் ஒவ்வொரு மாநிலத்திலும் கிடைத்த ஐந்து ரக




***வரைபடம் 3. நவம்பர் 2017ல் மாநிலம்வாரியாக கிடைத்த மீன்களின் அளவு***

## மாநிலவாரியான அளவு

மாநிலவாரியான மீன்களின் வரத்தைக் கணக்கிட்டால் தென்மேற்குக் கடற்கரைப் பகுதியில் ( கேரளா, கர்நாடகம், மற்றும் கோவாவில் தேர்வு செய்யப்பட்ட 15 துறைமுகங்களிலிருந்து) அதிக அளவாக 46,704.60 டன் கிடைத்துள்ளது.(45 சதம்) இதனைத் தொடர்வது வடமேற்குப் பகுதியாகும். (மகாராஷ்ட்ரா, மற்றும் குஜராத் கடற்கரைப் பகுதிகளில் தேர்வு செய்யப்பட்ட ஏழு மையங்கள்) 41,895.81 டன். (40 சதவீதம்) (வரைபடம் 3) தென் கிழக்குப் பகுதியான தமிழகம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் 14 துறைமுகங்களில் மொத்தத்தில் 4,925.55 டன் கிடைத்துள்ளது. இது மொத்த அளவில் ஐந்து சதவீதமாகும். வடகிழக்குப் பகுதியில் ஒடிசா, மேற்கு வங்கம் ஆகிய இடங்களிலுள்ள 10 மையங்களில் சுமார் 10,946.92 டன் மீன் கிடைத்தது. இது மொத்த அளவில் 10 சதவீதமாகும்.




***வரைபடம் 4 ஒவ்வொரு மாநிலத்திலும் இனவாரியாகக் கிடைத்த மீன்களின் ஒப்பீடு***


அட்டவணை3: நவம்பர் 2017ல் ஒவ்வொரு மாநிலத்திலும் கிடைத்த முக்கியமான மீன்கள்

| Item | Quantity in tons | % of total landings of the region |
|---|---|---|
| **South West** | | |
| Indian oil sardine | 14501.30 | 31.05 |
| Indian mackerel | 4250.00 | 9.10 |
| Squid | 3143.53 | 6.73 |
| Cuttlefish | 2852.48 | 6.11 |
| Ribbonfish | 2313.53 | 4.95 |
| **North West** | | |
| Horse mackerel | 6538.96 | 15.42 |
| Ribbon fish | 4512.71 | 10.64 |
| Cuttlefish | 4150.42 | 9.79 |
| Japanese thread fin bream | 3728.90 | 8.79 |
| Squid | 2919.44 | 6.88 |
| **South East** | | |
| Cuttlefish | 453.50 | 9.21 |
| Ribbonfish | 429.20 | 8.71 |
| Tuna | 401.89 | 8.16 |
| White prawn | 303.30 | 6.16 |
| Brown shrimp | 284.36 | 5.77 |
| **North East** | | |
| Croaker | 1431.43 | 13.08 |
| *Karikkadi* shrimp | 910.82 | 8.32 |
| Bombay duck | 900.26 | 8.22 |
| Ribbonfish | 683.16 | 6.24 |
| Indian mackerel | 682.18 | 6.23 |

## மாநிலவாரியான வரத்து

இந்தியாவின் முக்கியமான ஒன்பது கடற்கரை சார்ந்த மாநிலங்களில் குஜராத்தில் இம்மாதம் அதிகப்படியான அளவான 27,116.53 டன் மீன் வந்துள்ளது. இது மொத்த அளவில் 26 சதமாகும். (வரைபடம் 5) குஜராத்திற்கு அடுத்ததாக கர்நாடகாவில் 24,826.29 டன் வந்துள்ளது. இது மொத்த அளவில் 24 சதமாகும்.

கேரளா 19,994.85 டன்களுடன் மூன்றாவது இடத்திலுள்ளது (19 சதம்). மேற்குக் கடற்கரை மாநிலங்கள் அனைத்தும் சேர்ந்து மொத்த அளவில் 85 சத மீன் வரத்தைப் பெற்றுள்ளன. கிழக்குக் கடற்கரைப் பகுதியில் மேற்கு வங்கத்தில் அதிக அளவான 8,119.51 டன் (8 சதம்) பதிவாகியுள்ளது. மிகக் குறைவான மீன் வரத்து பதிவாகியுள்ள மாநிலம் கோவா. இங்கு 1,883.47 டன் மட்டுமே கிடைத்துள்ளது.




வரைபடம் 5: நவம்பர் 2017ல் மாநிலவாரியாகக் கிடைத்த அளவுகள் (டன்களில்)


## துறைமுகவாரியான மீன் வரத்து

இம்மாதத்தில் மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரைப் பகுதி களில் தேர்வு செய்த துறைமுகங்கள் வாரியாகக் கிடைத்த மீன்களின் அளவு பற்றிய வரைபடம் 6, 7 ஆகும். மொத்தமுள்ள 47 துறைமுகங்களில் குஜராத்திலுள்ள விராவல் துறைமுகத்தில் அதிக அளவான 13,181.50 டன் (13 சதம்) மீன் வரத்து பதி வாகியுள்ளது. இதனைத் தொடர்வது கேரளாவிலுள்ள பெய்பூர்

*அட்டவணை 4: நவம்பர் 2017 கிடைத்த முக்கியமான இனங்களின் பட்டியல்*

| Item | Quantity in tons | % of total landings of the state |
|---|---|---|
| **Kerala** | | |
| Indian oil sardine | 3194.57 | 15.98 |
| Squid | 1946.40 | 9.73 |
| Cuttlefish | 1869.70 | 9.35 |
| Ribbonfish | 1405.65 | 7.03 |
| Snapper | 1276.44 | 6.38 |
| **Karnataka** | | |
| Indian oil sardine | 10815.08 | 43.56 |
| Indian mackerel | 2681.13 | 10.80 |
| Deep bodied sardinella | 1670.00 | 6.73 |
| Squid | 1187.68 | 4.78 |
| Bull's eye -dusky finned | 1040.26 | 4.19 |
| **Goa** | | |
| Indian mackerel | 579.60 | 30.77 |
| Indian oil sardine | 491.65 | 26.10 |
| Tuna | 290.15 | 15.41 |
| Horse mackerel | 151.15 | 8.03 |
| Scad | 110.10 | 5.85 |
| **Maharashtra** | | |
| Indian mackerel | 6469.39 | 42.30 |
| Croaker | 1433.62 | 9.37 |
| Japanese thread fin bream | 1076.90 | 7.04 |
| Bombay duck | 928.93 | 6.07 |
| Reef cod | 659.66 | 4.31 |
| **Gujarat** | | |
| Ribbonfish | 4008.00 | 14.78 |
| Cuttlefish | 3923.00 | 14.47 |
| Squid | 2749.00 | 10.14 |
| Japanese thread fin bream | 2652.00 | 9.78 |
| Bull's eye- dusky finned | 2090.90 | 7.71 |
| **Tamil Nadu** | | |
| Cuttlefish | 424.27 | 16.02 |
| Squid | 230.17 | 8.69 |
| Tuna | 187.50 | 7.08 |
| Indian scad | 132.21 | 4.99 |
| Indian oil sardine | 118.43 | 4.47 |
| **Andhra Pradesh** | | |
| Ribbonfish | 347.45 | 15.25 |
| White prawn | 255.11 | 11.20 |
| Brown shrimp | 244.06 | 10.71 |
| Tuna | 214.39 | 9.41 |
| Tiger prawn | 156.96 | 6.89 |
| Odisha | | |
| Croaker | 655.35 | 23.18 |
| Ribbonfish | 292.56 | 10.35 |
| *Karikkadi* shrimp | 279.25 | 9.88 |
| Indian mackerel | 176.17 | 6.23 |
| Cat fish | 141.58 | 5.01 |
| **West Bengal** | | |
| Bombay duck | 836.84 | 10.31 |
| Croaker | 776.08 | 9.56 |
| *Karikkadi* shrimp | 631.57 | 7.78 |
| Deep sea shrimp | 513.13 | 6.32 |
| Indian mackerel | 506.02 | 6.23 |

துறைமுகமாகும். இங்கு 10,782.14 டன் (10 சதம்) பதிவாகியுள்ளது.




***வரைபடம் 6: நவம்பர் 2017ல் மேற்குக் கடற்கரை துறைமுகங்களில் கிடைத்த அளவுகள் (டன்களில்)***

குஜராத்தில் போர்பந்தர் துறைமுகமும், மகாராஷ்டிராவில் சாசூன் டாக் துறைமுகமும் ஒரே அளவான 8,233 டன் (8 சதவீதம்) மீன் வரத்தைப் பெற்றுள்ளன. கிழக்குக் கடற்கரையில், மேற்கு வங்கத்திலுள்ள சங்கர்பூர் துறைமுகத்தில் 2,994.55 டன் (3 சதவீதம்) அதிகமாகக் கிடைத்துள்ளது. மேற்குக் கடற்கரையில் தேர்வு செய்த 23 துறைமுகங்களில் 16 இடங்களில் 1000 டன்னிற்கும் அதிகமாக கிடைத்ததாகப் பதிவாகியுள்ளது. அதே சமயம் கிழக்குக் கடற்கரையில் நான்கு இடங்களில் 1000 டன்னிற்கும் அதிகமாகக் கிடைத்துள்ளது. மிகவும் குறைவான அளவான 46.58 டன் பதிவாகியுள்ள இடம் தமிழகத்திலுள்ள சின்னமுட்டம் துறைமுகமாகும்.


நவம்பர் 2017ல் வந்த மொத்த படகுகளின் எண்ணிக்கை 36,858 ஆகும். இதில் அதிகபட்சமாக 4,745 படகுகள் வந்துள்ளது

வேராவல் துறைமுகத்திலாகும். இதனை அடுத்து போர்பந்தர் துறைமுகத்தில் 3,297 படகுகள் வந்துள்ளன. மொத்தமுள்ள 47 துறைமுகங்களில் 11 இடங்களில் 1000றக்கும் அதிகமான படகுகள் வந்துள்ளன. இது குறித்த விவரம் அட்டவணை 5ல் உள்ளது. மீன்பிடிப்படகுகளில் 82 சதவீதம் மீன்பிடிக் கப்பல் வகையைச் சேர்ந்தவை. மற்றவை ப்ர்ஸ் சீனிங், ரிங் சீனிங், கில்னெட்டர்ஸ் மற்றும் பாரம்பரிய கட்டுமர வகையைச் சேர்ந்தவைகளாகும்.

### படகுகளின் வரவின் அடிப்படையிலான மதிப்பீடு

### ஒப்பீட்டு பகுத்தாய்வு

அட்டவணை 6ல் நவம்பர் மாதத்தை, முந்தைய மாதங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். நவம்பர் மாதத்தில் அக்டோபர் மாதத்தைவிட 2000 டன் அதிகமாகக் கிடைத்துள்ளது. ஆழ்கடல் மீன் பிடித்தல் சென்ற மாதத்தைவிட 3 சதவீத அளவில் அதிகரித்துள்ளது. கடலடிவாழ் மீன்களின் அளவும்




***வரைபடம் 7: நவம்பர் 2017ல் கிழக்குக் கடற்கரை துறைமுகங்களில் கிடைத்த அளவுகள் (டன்களில்)***

மூன்று சதம் அதிகரித்துள்ளது. அதேபோல ஷெல்ஃபிஷ் வரத்து சதவீதம் குறைந்துள்ளது. நவம்பர் மாதத்தில் சாளை மீனின் வரத்து அதிகமாகவும், இரண்டாவது இடத்தில் அயிலை மீனும் உள்ளது. குஜராத் அதிகமான மீன் வரத்தில் முதலிடத்தையும், விராவல் துறைமுகம் அதிகமான படகு வரத்தைக் கொண்டதாகவும் உள்ளது.

***அட்டவணை 5: நவம்பர் 2017ல் 1000 படகுகளுக்கும் அதிகமாக வந்த துறைமுகங்கள்***

| Sl. No. | Fishing harbours | State | Number of boat landings |
|---|---|---|---|
| 1 | Veraval | Gujarat | 4745 |
| 2 | Porbandar | Gujarat | 3297 |
| 3 | Mangrol | Karnataka | 2543 |
| 4 | Malpe | Karnataka | 2102 |
| 5 | Sasson Dock | Maharashtra | 1795 |
| 6 | Mangalore | Karnataka | 1645 |
| 7 | New Ferry Wharf | Maharashtra | 1312 |
| 8 | Harne | Maharashtra | 1238 |
| 9 | Digha (Sankarpur) | West Bengal | 1151 |
| 10 | Deshapran | West Bengal | 1139 |
| 11 | Sakthikulangara | Kerala | 1007 |

அக்டோபர் மாதத்தைவிட நவம்பரில் 2000 படகுகள் அதிகமாக வந்துள்ளன.

### சுருக்கம்

நவம்பர் 2017ல் 47 முக்கியமான துறைமுகங்களில் சுமார் 1,04,988.48 டன் மீன் பிடித்தல் நடந்துள்ளது. இதில் ஆழ்கடல் மீன்பிடிப்பு, ஷெல்ஃபிஷ் மற்றும் கடலடிவாழ் மீன்பிடிப்பைவிட அதிக அளவில் இருந்துள்ளது. மொத்த அளவில் சாளை மீனின் வரத்து அதிகமாக இருந்துள்ளது. மேற்குக் கடற்கரை மாநிலங்கள் மொத்தத்தில் 85 சதவீதமும், தென்மேற்குக் கடற்கரைப் பகுதி கள் 45 சதவீதமும் பங்களித்துள்ளன. ஒன்பது கடற்கரை சார்ந்த மாநிலங்களில் குஜராத்தில் அதிகமான மீன் பிடிப்பு நடைபெற்றுள்ளது. மொத்தமுள்ள 47 துறைமுகங்களில் 20 இடங்களில் 1000 டன்களுக்கும் அதிகமான மீன் பிடித்தல் இருந்துள்ளது. விராவல் துறைமுகத்தில் அதிகமான மீனும் படகுகளின் வரத்தும் அதிகமாக இருந்தது.

***அட்டவணை 6: ஒப்பீட்டு பகுத்தாய்வு***

| | September 2017 | October 2017 | November 2017 |
|---|---|---|---|
| Total Catch | 102013.55 t | 102848.44 t | 104988.48 t |
| Landing of Pelagic finfishes | 46448.00 t (46%) | 53123.87 t (52%) | 54485.10 t (52%) |
| Landing of Demersal finfishes | 21374.27 t (21%) | 22231.88 t (21%) | 25499.46 t (24%) |
| Landing of Shellfishes | 34191.28 t (33%) | 27492.69 t (27%) | 25003.91 t (24%) |
| Species recorded highest landing | Squid (14%) | Indian mackerel (13%) | Indian oil sardine (15%) |
| State recorded highest landing | Karnataka (25%) | Gujarat (25%) | Gujarat (26%) |
| Harbour recorded highest landing | Veraval (14%) | Veraval (11%) | Veraval (13%) |
| Total Boat Arrivals | 32657 | 34623 | 36858 |

*Percentage of Total Catch

# டிசம்பர் 2017ல் இந்தியாவில் குறிப்பிட்ட துறைமுகங்களில் மீன் வரத்தின் சிறப்பம்சங்கள்

ஆர். பாலசுப்ரமணியன், வி.வி. அஃப்சல், ஜோய்சி வி. தாமஸ்
நெட்ஃபிஷ் – எம்.பி.இ.டி.எ

நெட்ஃபிஷ் என்பது இந்தியாவில் கடற்கரையோரம் உள்ள மாநிலங்களில் தேர்ந்தெடுத்த துறைமுகங்களில் தினமும் வரும் மீன்பிடிப் படகுகளின் வருகை, பிடித்த மீன்களின் அளவு போன்றவற்றைப் பதிவு செய்வதற்கான உரிமை பெற்றதாகும். இது டிசம்பர் 2017ல் 46 முக்கியமான துறைமுகங்களில் பிடிக்கப்பட்ட மீன்களை ஆய்வு செய்து வழங்கப்பட்ட அறிக்கையாகும்.

### செயல்முறை

கடற்கரையுள்ள மாநிலங்களின் துறைமுகங்களில் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பவர்கள் தினமும் வரும் படகுகளின் எண்ணிக்கை, கரையிறங்கும் மீன்களின் அளவு ஆகியவற்றை (அட்டவணை-1) குறிப்பெடுப்பர். பல்வேறு இனமீன்களின் தோராயாமான மதிப்பை கண் அளவில் கணக்கிட்டு பதிவு செய்வது வழக்கம். பெயர், பதிவெண், மீன் பிடிக்கப்பயன்படுத்தப்பட்ட கலத்தின் தன்மை, வந்து சேர்ந்த துறைமுகம் போன்ற விவரங்கள் பதிவு செய்யப்படும். இந்த விவரங்கள் அனைத்தும் எம்.எஸ். ஆபீஸ் (எக்செல்) மூலமாக மீன்களின் இனவாரியாகவும், மாநிலவாரியாகவும், துறைமுகவாரியாகவும் தனித்தனியே பகுத்தாய்வு செய்யப்படும்.

***அட்டவணை-1 : புள்ளிவிவரத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட துறைமுகங்கள் மற்றும் தரையிரங்கும் மையங்கள்***


| Sl.No | State | Fishing harbour |
|---|---|---|
| 1 | Kerala | Beypore |
| 2 | | Puthiyappa |
| 3 | | Thoppumpady |
| 4 | | Munambam |
| 5 | | Sakthikulangara |
| 6 | | Thottapally |
| 7 | | Kayamkulam |
| 8 | | Vizhinjam |
| 9 | Karnataka | Mangalore |
| 10 | | Malpe |
| 11 | | Gangoli |
| 12 | | Tadri |
| 13 | | Karwar |
| 14 | | Honnavar |
| 15 | Maharashtra | Harne |
| 16 | | New Ferry Wharf |
| 17 | | Ratnagiri (Mirkarwada) |
| 18 | | Sasson Dock |
| 19 | Gujarat | Veraval |
| 20 | | Porbandar |
| 21 | | Mangrol |
| 22 | West Bengal | Digha (Sankarpur) |
| 23 | | Deshapran |
| 24 | | Namkhana |
| 25 | | Sultanpur |
| 26 | | Kakdwip |
| 27 | | Raidigi |
| 28 | Odisha | Paradeep |
| 29 | | Balaramgadi |
| 30 | | Bahabalapur |
| 31 | | Dhamara |
| 32 | Andhra Pradesh | Kakinada |
| 33 | | Machilipatnam |
| 34 | | Nizampatnam |
| 35 | | Visakhapatnam |
| 36 | Tamil Nadu | Chennai |
| 37 | | Pazhaiyar |
| 38 | | Nagapattinam |
| 39 | | Tuticorin |
| 40 | | Cuddalore |
| 41 | | Mandapam |
| 42 | | Colachel |
| 43 | | Pondicherry |
| 44 | | Karaikal |
| 45 | Goa | Cutbona |
| 46 | | Malim |

## கிடைத்த மீன்களின் அடிப்படையில் மதிப்பீடு


டிசம்பர் 2017ல் தேர்வு செய்யப்பட்ட 46 துறைமுகங்கள் மற்றும் தரையிரங்கும் மையங்களில் சுமார் 82,849.37 டன் மீன் கிடைத்ததாக பதிவாகியுள்ளது. இதில் 39,510.15 டன் (48 சதவீதம்) ஆழ்கடல் மீன்பிடித்தலின் மூலமாகக் கிடைத்ததாகும். இதில் 23,492.34 டன் (28 சதவீதம்) கடலடிவாழ் மீன்களாகும், மீதியுள்ள 12,433.70 டன் (15 சதவீதம்) மொலுஸ்கேன்ஸ் மற்றும் 7,413.18 டன் (9 சதவீதம்) கணுக்காலி வகையைச் சேர்ந்தவையாகும். (வரை படம்.1)

சுமார் 112 வகையான மீன்கள் இந்த மாதம் கிடைத்தன. அவற்றை வரிசைப்படுத்திய போது முதல் ஐந்து இடத்தில் இருப்பவை, சாளை, அயிலை, வாளை, கணவாய், மற்றும் ஊசிக்கணவாய் என்பனவாகும். இந்த ஐந்தும் சேர்ந்து மொத்த அளவில் 41 சதவீதமாகும். (வரை படம்:2) இவற்றுள் சாளை மீன் மட்டுமே அனைத்து இடங்களிலும் அதிகபட்சமாக 8,433.07 டன் அளவில் இருந்தது. இது மொத்த அளவில் 10 சதமாகும். இந்த ஐந்து வகைகளைத் தவிர, அடுத்த நிலையில் இருந்தவை, கக்காசி, மற்றும் சங்கரா ஆகும். இவற்றின் பங்கு முறையே 4,483.24 டன், & 4,111.69 டன்களாகும். இம்மாதம் மிகக் குறைந்த அளவில் கிடைத்தது எல்லோஃபின் சீ பிரீம் ஆகும்.(0.08 டன்)

இனம் மற்றும் அளவுப்படி வரிசைப்படுத்திய விவரத்தை அட்டவணை 2ல் காணலாம். ஆழ்கடல் மீன் வரிசையில் சாளை மீன் முதல் இடத்தையும், இதனைத் தொடர்ந்து அயிலையும், வாளையும் இருக்கக் காணலாம். கடலடி மீன் வகையில், புல்ஸ் ஐ, குரோக்கர்ஸ் மற்றும் சங்கரா வகை மீன்களாகும். ஷெல் ஃபிஷ் வகையில் கிடைத்தவையில் மொலுஸ்கேன் இனத்தைச் சேர்ந்த கணவாய், ஊசிக்கணவாய், ஆக்டோபஸ், ஆகியவை 63 சதவீதமும், மீதமுள்ள 37 சதம் ஓட்டுமீன் வகையில் பினாயிட் இறால் அதிக அளவில் இருந்தாலும், கரிகாடி இறால் அதிக அளவில் இருந்தது. (2,033.09 டன்)




*வரைபடம் 1: டிசம்பர் 2017ல் இனவாரியான மீன் வரத்து*




*வரைபடம் 2: டிசம்பர் 2017ல் கிடைத்த முக்கியமான மீன்கள்*

*அட்டவணை-2 : டிசம்பர் 2017-ல் இனவாரியான மீன்களின் பட்டியல்*


| Fish Item | Qty. in tons | % of Total Catch |
|---|---|---|
| **Pelagic finfish** | | |
| Indian oil sardine | 8433.07 | 10.18 |
| Indian mackerel | 7420.70 | 8.96 |
| Ribbon fish | 6923.51 | 8.36 |
| Tuna | 3860.15 | 4.66 |
| Anchovy | 2189.36 | 2.64 |
| Seer fish | 1719.63 | 2.08 |
| Scads | 1442.27 | 1.74 |
| Horse mackerel | 1378.08 | 1.66 |
| Dolphin fish | 1341.32 | 1.62 |
| Bombay duck | 1064.42 | 1.28 |
| Lesser sardines | 987.50 | 1.19 |
| Barracuda | 606.31 | 0.73 |
| Trevallies | 518.75 | 0.63 |
| Herrings | 335.72 | 0.41 |
| Leather jacket | 324.61 | 0.39 |
| Queen fish | 310.37 | 0.37 |
| Hilsa | 91.81 | 0.11 |
| Mullet | 89.49 | 0.11 |
| Marlins | 87.06 | 0.11 |

| | | |
|---|---|---|
| Oriental bonito | 68.90 | 0.08 |
| Cobia | 52.30 | 0.06 |
| Sail fish | 52.00 | 0.06 |
| Needle fish | 50.10 | 0.06 |
| Indian ilisha | 44.79 | 0.05 |
| Flat needle fish | 41.06 | 0.05 |
| Seabass | 26.48 | 0.03 |
| Rainbow runner | 23.69 | 0.03 |
| Indian salmon | 17.92 | 0.02 |
| Silver sillago | 7.40 | 0.01 |
| Indian thread fish | 0.93 | 0.00 |
| Milk fish | 0.37 | 0.00 |
| Ladyfish | 0.10 | 0.00 |
| **Total Pelagic** | **39510.15** | **47.69** |
| **Demersal finfish** | | |
| Bull's eyes | 6022.62 | 7.27 |
| Japanese Threadfin bream | 4111.69 | 4.96 |
| Croakers | 3523.51 | 4.25 |
| Reef cods | 2104.33 | 2.54 |
| Sole fish | 2001.21 | 2.42 |
| Lizard fish | 1782.94 | 2.15 |
| Cat fish | 1499.22 | 1.81 |
| Pomfrets | 873.52 | 1.05 |
| Snapper | 622.06 | 0.75 |
| Goat fish | 247.15 | 0.30 |
| Eel | 172.39 | 0.21 |
| Moon fish | 165.57 | 0.20 |
| Pony fishes | 155.08 | 0.19 |
| Rays | 81.77 | 0.10 |
| Tiger perch | 45.00 | 0.05 |
| Indian halibut | 22.43 | 0.03 |
| Ghol | 21.00 | 0.03 |
| Filefish | 10.04 | 0.01 |
| Emperor bream | 8.97 | 0.01 |
| Whip fin silver biddy | 7.53 | 0.01 |
| Glassy perchlet | 5.76 | 0.01 |
| Parrot fish | 5.10 | 0.01 |
| Black tip shark | 2.99 | 0.00 |
| Spine foot | 0.25 | 0.00 |
| Indian drift fish | 0.15 | 0.00 |
| Yellowfin sea bream | 0.08 | 0.00 |
| **Total Demersal** | **23492.34** | **28.36** |
| **Shellfish** | | |
| *Crustacean* | | |
| Penaeid shrimps | 6770.98 | 8.17 |
| Sea crab | 604.51 | 0.73 |
| Mud crab | 19.00 | 0.02 |
| Lobsters | 15.17 | 0.02 |
| Non-penaeid shrimps | 3.51 | 0.00 |
| *Total Crustacean* | *7413.18* | *8.95* |
| *Mollusc* | | |
| Squid | 5908.19 | 7.13 |
| Cuttlefish | 5533.04 | 6.68 |
| Octopus | 992.47 | 1.20 |
| *Total Mollusc* | *12433.70* | *15.01* |
| *Total Shellfish* | *19846.87* | *23.96* |
| **GRAND TOTAL** | **82849.37** | **100.00** |


## மாநில வாரியான அளவு

மாநிலவாரியான மீன்களின் வரத்தைக் கணக்கிட்டால் வட மேற்குப் பகுதியான (மகாராஷ்ட்ரா, மற்றும் குஜராத் கடற்கரைப் பகுதிகளில் தேர்வு செய்யப்பட்ட ஏழு மையங்கள்) அதிக அளவாக 37,520.41டன் (45 சதவீதம்) கிடைத்துள்ளது இதனைத் தொடர்வது தென்மேற்குக் கடற்கரைப் பகுதியில் (கேரளா, கர்நாடகம், மற்றும் கோவாவில் தேர்வு செய்யப்பட்ட 15 துறைமுகங்களிலிருந்து) 30,458.31 டன் (37 சதவீதம்) (வரைபடம் 3) தென் கிழக்குப் பகுதி யான தமிழகம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் 13 துறைமுகங்களில் மொத்தத்தில் 4,640.57 டன் கிடைத்துள்ளது. இது மொத்த அளவில் ஆறு சதவீதமாகும். வடகிழக்குப் பகுதியில் ஒடிசா, மேற்கு வங்கம் ஆகிய இடங்களிலுள்ள 10 மையங்களில் சுமார் 10,230.08 டன் மீன் கிடைத்தது. இது மொத்த அளவில் 12 சதவீதமாகும்.

தென்மேற்கு மற்றும் வடகிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் ஆழ்கடல் மீன்கள் இதர இரண்டு இனங்களைவிட அதிகமாக




*வரைபடம் 3. டிசம்பர் 2017ல் மாநில வாரியாக கிடைத்த மீன்களின் அளவு*




*வரைபடம் 4 ஒவ்வொரு மாநிலத்திலும் இனவாரியாகக் கிடைத்த மீன்களின் ஒப்பீடு*

இருந்தது. அதேபோல, தென்மேற்குப் பகுதியில் ஃபின்ஃபிஷ் அதிகமாக இருந்தது. (வரைபடம்-4) தென்கிழக்குப் பகுதியில் ஷெல்ஃபிஷ் அதிகமாக இருந்தது. வடமேற்கு தவிர மற்ற இடங்களில் கடலடிவாழ் மீன்களின் வரத்து குறைவாக இருந்தது.

அட்டவணை 3ல் ஒவ்வொரு மாநிலத்திலும் கிடைத்த ஐந்து ரக மீன்களின் அளவு தரப்பட்டுள்ளது.

*அட்டவணை3: டிசம்பர் 2017ல் ஒவ்வொரு மாநிலத்திலும் கிடைத்த முக்கியமான மீன்கள்*


| Item | quantity in tons | % of total landings of the region |
|---|---|---|
| **South West** | | |
| Indian oil sardine | 7266.81 | 23.86 |
| Indian mackerel | 3279.51 | 10.77 |
| Squid | 2270.34 | 7.45 |
| Ribbon fish | 1418.30 | 4.66 |
| Cuttlefish | 1171.74 | 3.85 |
| **North West** | | |
| Ribbon fish | 4303.74 | 11.47 |
| Cuttlefish | 3643.97 | 9.71 |
| Dusky finned bull's eye | 3494.60 | 9.31 |
| Indian mackerel | 3441.72 | 9.17 |
| Squid | 3125.15 | 8.33 |
| **South East** | | |
| Tuna | 494.40 | 10.65 |
| Ribbon fish | 463.04 | 9.98 |
| Cuttlefish | 430.86 | 9.28 |
| Brown shrimp | 288.00 | 6.21 |
| White prawn | 263.30 | 5.67 |
| **North East** | | |
| Croaker | 1299.67 | 12.70 |

| | | |
|---|---|---|
| Indian oil sardine | 816.61 | 7.98 |
| Ribbon fish | 738.43 | 7.22 |
| Golden anchovy | 719.80 | 7.04 |
| *Karikkadi* shrimp | 676.90 | 6.62 |

### மாநிலவாரியான வரத்து

இந்தியாவின் முக்கியமான ஒன்பது கடற்கரை சார்ந்த மாநிலங்களில் குஜராத்தில் இம்மாதம் அதிகப்படியான அளவான 25,254.28 டன் மீன் வந்துள்ளது. இது மொத்த அளவில் 30 சதவீதமாகும். (வரைபடம் 5) குஜராத்திற்கு அடுத்ததாக கர்நாடகாவில் 16,493.81 டன் வந்துள்ளது. இது மொத்த அளவில் 20 சதவீதமாகும்.

மகாராஷ்டிரா 12,266.13 டன்களுடன் மூன்றாவது இடத்தி லுள்ளது (15 சதவீதம்). மேற்குக் கடற்கரை மாநிலங்கள் அனைத்தும் சேர்ந்து மொத்த அளவில் 82 சதவீத மீன் வரத்தைப் பெற்றுள்ளன. கிழக்குக் கடற்கரைப் பகுதியில் மேற்கு வங்கத்தில் அதிக அளவான 7,239.78 டன் ( 9 சதவீதம்) பதிவாகியுள்ளது. மிகக் குறைவான மீன் வரத்து பதிவாகியுள்ள மாநிலம் கோவா. இங்கு 1,840.72 டன் மட்டுமே கிடைத்துள்ளது.




*வரைபடம் 5: டிசம்பர் 2017ல் மாநிலவாரியாகக் கிடைத்த அளவுகள் (டன்களில்)*

*அட்டவணை 4: டிசம்பர் 2017 கிடைத்த முக்கியமான இனங்களின் பட்டியல்*


| Item | Quantity in tons | % of total landings of the state |
|---|---|---|
| **Kerala** | | |
| Indian oil sardine | 1921.01 | 15.84 |
| Squid | 1151.62 | 9.50 |
| Japanese threadfin bream | 922.60 | 7.61 |
| Ribbonfish | 863.10 | 7.12 |
| Cuttlefish | 841.18 | 6.94 |
| **Karnataka** | | |
| Indian oil sardine | 4396.10 | 26.65 |
| Indian mackerel | 2188.06 | 13.27 |
| Squid | 1105.72 | 6.70 |
| Little tunny | 819.83 | 4.97 |
| Indian scad | 787.41 | 4.77 |
| **Goa** | | |
| Indian oil sardine | 949.70 | 51.59 |
| Indian mackerel | 363.53 | 19.75 |
| Little tunny | 167.95 | 9.12 |
| Tuna | 95.00 | 5.16 |
| Horse mackerel | 49.90 | 2.71 |
| **Maharashtra** | | |
| Indian mackerel | 2865.42 | 23.36 |
| Ribbonfish | 932.24 | 7.60 |
| Croaker | 906.82 | 7.39 |
| Cuttlefish | 862.47 | 7.03 |
| Horse mackerel | 744.14 | 6.07 |
| **Gujarat** | | |
| Dusky finned bull's eye | 3494.60 | 13.84 |
| Ribbonfish | 3371.50 | 13.35 |
| Cuttlefish | 2781.50 | 11.01 |
| Squid | 2654.00 | 10.51 |
| Japanese Thread fin bream | 2313.00 | 9.16 |
| **Tamil Nadu** | | |

| | | |
|---|---|---|
| Cuttlefish | 394.19 | 18.29 |
| Squid | 188.73 | 8.76 |
| Tuna | 182.15 | 8.45 |
| Indian oil sardine | 87.41 | 4.06 |
| Indian mackerel | 86.96 | 4.04 |
| **Andhra Pradesh** | | |
| Ribbonfish | 391.00 | 15.73 |
| Tuna | 312.25 | 12.56 |
| Brown shrimp | 252.77 | 10.17 |
| White prawn | 217.58 | 8.75 |
| Pink shrimp | 199.82 | 8.04 |
| **Odisha** | | |
| Croaker | 614.10 | 20.54 |
| Ribbonfish | 335.55 | 11.22 |
| Golden anchovy | 251.60 | 8.41 |
| Karikkadi shrimp | 247.70 | 8.28 |
| Sole fish | 153.71 | 5.14 |
| **West Bengal** | | |
| Indian oil sardine | 717.50 | 9.91 |
| Croaker | 685.57 | 9.47 |
| Bombay duck | 557.78 | 7.70 |
| Golden anchovy | 468.20 | 6.47 |
| Indian mackerel | 449.04 | 6.20 |


### துறைமுகவாரியான மீன் வரத்து

இம்மாதத்தில் மேற்கு மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் தேர்வு செய்த துறைமுகங்கள் வாரியாகக் கிடைத்த மீன்களின் அளவு பற்றிய வரைபடம் 6, 7 ஆகும். மொத்தமுள்ள 46 துறைமுகங்களில் குஜராத்திலுள்ள வேரவால் துறைமுகத்தில் அதிக அளவான 10,625.40 டன் (13 சதம்) மீன் வரத்து பதிவாகியுள்ளது. இதனைத் தொடர்வது குஜராத்திலுள்ள போர்பந்தர் துறைமுகத்தில் 8,917.88 (11 சதம்) கர்நாடகத்திலுள்ள மால்பே துறைமுகத்தில் 7,351.60 டன் பதிவாகியுள்ளது. (9 சதம்) கேரளாவிலுள்ள பெய்பூர் துறைமுகத்தில் 6,907.10 டன் (8 சதம்) பதிவாகியுள்ளது.

கிழக்குக் கடற்கரையில், மேற்கு வங்கத்திலுள்ள திகா (சங்கர்பூர்) துறைமுகத்தில் 3,299.65 டன் (4 சதம்) அதிகமாகக் கிடைத்துள்ளது. மேற்குக் கடற்கரையில் தேர்வு செய்த 23 துறைமுகங்களில் 13 இடங்களில் 1000 டன்னிற்கும் அதிகமாக கிடைத்ததாகப் பதிவாகியுள்ளது. அதே சமயம் கிழக்குக் கடற்கரையில் நான்கு இடங்களில் 1000 டன்னிற்கும் அதிகமாகக் கிடைத்துள்ளது. மிகவும் குறைவான அளவான 13.75 டன் பதிவாகியுள்ள இடம் தமிழகத்திலுள்ள குளச்சல் துறைமுகமாகும்.




*வரைபடம் 6: டிசம்பர் 2017ல் மேற்குக் கடற்கரை துறைமுகங்களில் கிடைத்த அளவுகள் (டன்களில்)*




*வரைபடம் 7: டிசம்பர் 2017ல் கிழக்குக் கடற்கரை துறைமுகங்களில் கிடைத்த அளவுகள் (டன்களில்)*

### படகுகளின் வரவின் அடிப்படையிலான மதிப்பீடு

டிசம்பர் 2017ல் வந்த மொத்த படகுகளின் எண்ணிக்கை 32,115 ஆகும். இதில் அதிகபட்சமாக 4,687 படகுகள் வந்தது விராவல் துறைமுகத்திலாகும். இதனைத் தொடர்வது போர்பந்தர். இங்கு 3,178 படகுகள் வந்துள்ளன. மொத்தமுள்ள 46 துறைமுகங்களில் 8 இடங்களில் 1000ற்கும் அதிகமான படகுகள் வந்துள்ளன. இது குறித்த விவரம் அட்டவணை 5ல் உள்ளது. மீன்பிடிப்படகுகளில் 82 சதவீதம் மீன்பிடிக் கப்பல் வகையைச் சேர்ந்தவை. மற்றவை ப்ர்ஸ் சீனிங், ரிங் சீனிங், கில்னெட்டர்ஸ் மற்றும் பாரம்பரிய கட்டுமர வகையைச் சேர்ந்தவைகளாகும்.

*அட்டவணை 5: டிசம்பர் 2017ல் 1000 படகுகளுக்கும் அதிகமாக வந்த துறைமுகங்கள்*

| Sl.No | Fishing harbours | State | Number of boat landings |
|---|---|---|---|
| 1 | Veraval | Gujarat | 4687 |
| 2 | Porbandar | Gujarat | 3178 |
| 3 | Mangrol | Gujarat | 2478 |
| 4 | Malpe | Karnataka | 2212 |
| 5 | Sasson Dock | Maharashtra | 1263 |
| 6 | Mangalore | Karnataka | 1225 |
| 7 | Harne | Maharashtra | 1090 |
| 8 | Digha (Sankarpur) | West Bengal | 1060 |

## ஒப்பீட்டு பகுத்தாய்வு

அட்டவணை 6ல் டிசம்பர் மாதத்தை முந்தைய மாதங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். டிசம்பர் மாதத்தில் நவம்பர் மாதத்தைவிட 22,000 டன் குறைவாகக் கிடைத்துள்ளது. ஆழ்கடல் மீன் பிடித்தல் சென்ற மாதத்தைவிட அதிகரித்தாலும் சதவீத அளவில் குறைந்துள்ளது. கடலடிவாழ் மீன்களின் அளவும் நான்கு சதவீதம் அதிகரித்துள்ளது. அதேபோல ஷெல்ஃபிஷ் வரத்தின் சதவீதம் அதே அளவில் உள்ளது. டிசம்பர் மாதத்தில் சாலை மீனின் வரத்து அதிகமாக இருந்தது. குஜராத் அதிகமான மீன் வரத்தில் முதலிடத்தையும், வேராவல் துறைமுகம் அதிகமான படகுகளின் வரத்தைக் கொண்டதாகவும் உள்ளது. நவம்பர் மாதத்தைவிட டிசம்பரில் படகுகள் வரத்து 4,700க்கும் மேலாகக் குறைந்துள்ளது.

*அட்டவணை 6: ஒப்பீட்டு பகுத்தாய்வு*

| | October 2017 | November 2017 | December 2017 |
|---|---|---|---|
| **Total Catch** | **1,02,848.44 t** | **1,04,988.48 t** | **82,849.37 t** |
| Landing of Pelagic finfishes | 53,123.87 t (52%) | 54,485.10 t (52%) | 39,510.15 t (48%) |
| Landing of Demersal finfishes | 22,231.88 t (21%) | 25,499.46 t (24%) | 23,492.34 t (28%) |
| Landing of Shellfishes | 27,492.69 t (27%) | 25,003.91 t (24%) | 19,846.87 t (24%) |
| Species recorded highest landing | Indian mackerel (13%) | Indian oil sardine (15%) | Indian oil sardine (10%) |
| State recorded highest landing | Gujarat (25%) | Gujarat (26%) | Gujarat (30%) |
| Harbour recorded highest landing | Veraval (11%) | Veraval (13%) | Veraval (13%) |
| **Total Boat Arrivals** | **34,623** | **36,858** | **32,115** |

*Percentage of Total Catch

## சுருக்கம்

டிசம்பர் 2017ல் 46 முக்கியமான துறைமுகங்களில் சுமார் 82,849.37 டன் மீன் பிடித்தல் நடந்துள்ளது. இதில் ஆழ்கடல் மீன்பிடிப்பு, ஷெல்ஃபிஷ் மற்றும் கடலடிவாழ் மீன்பிடிப்பைவிட அதிக அளவில் இருந்துள்ளது. மொத்த அளவில் சாளை மீனின் வரத்து அதிக மாக இருந்துள்ளது. மேற்குக் கடற்கரை மாநிலங்கள் மொத்தத்தில் 85 சதவீதமும், தென்மேற்குக் கடற்கரைப் பகுதிகள் 45 சதவீதமும் பங்களித்துள்ளன. ஒன்பது கடற்கரை சார்ந்த மாநிலங்களில் குஜராத்தில் அதிகமான மீன் பிடிப்பு நடைபெற்றுள்ளது. மொத்தமுள்ள 46 துறைமுகங்களில் 13 இடங்களில் 1000 டன்களுக்கும் அதிகமான மீன் பிடித்தல் இருந்துள்ளது. விராவல் துறைமுகத்தில் அதிகமான மீன் மற்றும் படகுகளின் வரத்தும் அதிகமாக இருந்தது.

# கர்நாடகா
# மத்சிய மேளா 2017ல் எம்.பி.இ.டி.எ




*திரு.பிரமோத் மாதவராஜ், அமைச்சர், மீன்வளத்துறை, கர்நாடகம், மற்றும் திரு.எச்.எஸ்.வீரப்ப கவுடா, இயக்குனர், மீன் வளர்ப்பு, கர்நாடகம் ஆகியோர் எம்.பி.இ.டி.எ.வின் கண்காட்சிக் கூடத்தைப் பார்வையிடுகின்றனர்*

மீன்தொழில் துறையில் முக்கியமான நிகழ்வாகக் கருதப்படும் கர்நாடாக மத்சிய மேளா 2017 பெங்களூருவில் ஸ்ரீகாண்டீரவா ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இதனை மீன்வளத் துறையும், கர்நாடக அரசும் இணைந்து நடத்தினர். நான்கு நாட்களாக நடைபெற்ற இந்த விழாவை கர்நாடக அரசின் மீன் வளத்துறை அமைச்சர் திரு. பிரமோத் மாதவராஜ் துவக்கி வைக்க, திரு.எச்.எஸ்.வீரப்ப கவுடா, இயக்குனர், மீன்வளத் துறை, கர்நாடகா, விழாவிற்குத் தலைமை தாங்கினார். கர்நாடகத்தில் இத்துறை சார்ந்த அலுவலகர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

கர்நாடகாவின் மீன்வளத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரண்டாவது மத்சிய மேளா இத்துறைக்கான புதிய முதலீட்டாளர்களைக் கவரும் விதத்தில் அமைந்திருந்தது. மீன்பிடித் தொழிலும், மீன் வளர்த்தலும் உணவு உற்பத்தி முறையில் துரித மாக வளர்ந்து வரும் ஒரு அம்சமாக உள்ளது.

இந்த கண்காட்சியில் நாட்டில் பல பகுதியிலிருந்தும் கண்காட்சிக் கூடங்களை அமைப்பவர்களும், பங்குதாரர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இக்கண்காட்சியை சுமார் 50,000 பார்வையாளர்கள் கண்டு ரசித்தனர். அலங்கார மீன் காட்சியகம், அலங்கார மீன்வளர்ப்புப் போட்டி, உடன் உண்ணக் கூடிய மீன் வகைகள், மீன் வளர்ப்பதற்கான உபகரணங்கள், புதிய தகவல்களை தரும் பகுதி, சுவையான உணவகங்கள், மீன் சமையல் போட்டிகள், புதிது மாறாத மீன்களின் விற்பனை, அலங்கார மீன் விற்பனை, கடல் சங்குகள் கண்காட்சி என்பவை பார்வையாளர்களைக் கவர்ந்த அம்சங்களாகும்.

எம்.பி.இ.டி.எ.வின் காட்சிக் கூடத்தில் மதிப்பூட்டப்பட்ட மீன் உணவுப் பொருட்களின் பேனர்களும், வர்த்தக முக்கியத்துவமான இறால், நண்டு, செபலோபேட், மீன்களின் வண்ணப் படங்களும், கோவாவில் நடைபெறவுள்ள ஐ.ஐ.எஸ்.எஸ்.2018 குறித்த விளம்பரமும் பார்வையாளர்களைக் கவர்ந்தது.

ஐ.ஐ.எஸ்.எஸ்.சில் கலந்து கொள்வதற்கான விண்ணப்ப படிவங்கள் தேவையானவர்களுக்கு வழங்கப்பட்டது. இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த மீன் தொட்டி பார்வையாளர்களுக்கு முதன்மையான காட்சிப் பொருளாக இருந்தது. எம்.பி.இ.டி.எ.வின் காட்சிக் கூடத்தின் வழியே மத்திய உள்நாட்டு நீரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், (சி.ஐ.எஃப்.ஆர்.ஐ), மத்திய நீரின வளர்ப்பு தொழில்நுட்ப நிலையம், (சி.ஐ.எஃப்.டி) வேளாண் அறிவியல் பல் கலைக்கழகம்,(யு.எ.எஸ்) பெங்களூரு, மத்திய சுத்தநீர் மீன்வளர்ப்பு நிலையம் (சி.ஐ.எஃப்.எ) கர்நாடக மீன் வளர்ச்சிக் கழகம் (கே.எஃப்.டி.சி) மற்றும் கால்நடை மற்றும் மீன்வளர்ப்புத் துறை, கர்நாடகா ஆகியோரும் மத்சியா மேளாவில் காட்சிக் கூடங்களை அமைத்திருந்தனர்.

திரு.பிரமோத் மாதவராஜ், அமைச்சர், மீன்வளத் துறை, கர்நாடகம், இயக்குனர், சி.ஐ.எஃப்.ஆர்.ஐ, வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், மங்களூர், மீன்வளர்ப்புக் கல் லூரிப் பேராசிரியர்கள், கர்நாடக மாநில மீன்வளர்ப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், மற்றும் இத்துறையின் பங்குதாரர்கள் எம்.பி.இ.டி.எ.வின் காட்சிக் கூடத்தைப் பார்வையிட்டனர்.

மீன்வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு தொடர்பான தொழில்நுட்ப கருத்தரங்கங்கள் விவசாயிகளின் நலன் கருதி மாநில மொழிகளில் நடத்தப்பட்டது. மேலும் கர்நாடகத்தின் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் விதத்திலான கலை நிகழ்ச்சிகள் இந்த நான்கு நாட்களிலும் நடத்தப்பட்டது.

நிறைவு நாள் நிகழ்ச்சிக்கு மீன்வளர்ப்புத் துறை இயக்குநர் தலைமை தாங்கி சான்றிதழ்களையும், நினைவுப் பரிசுகளையும் வழங்கினார்.

# சுற்றுச் சூழலுக்கேற்ற நிலையான இறால் வளர்ப்பு பயிற்சி

## சூரத் பயிற்சி முகாம்

எம்.பி.இ.டி.எ.வின் வல்சாடு மண்டல அலுவலகம் சுற்றுச் சூழலுக்கேற்ற, நிலைத்த இறால் வளர்ப்பு தொடர்பான ஐந்து நாள் பயிற்சி முகாமை நடத்தியது. சூரத்திலுள்ள சாச்சின் கம்யூனிட்டி ஹாலில் இந்த பயிற்சி வழங்கப்பட்டது. சூரத் மாவட்டத்தில், கடற்கரையோரமுள்ள கிராமங்களில் இறால் வளர்ப்பை அதி கரிக்கும் நோக்கத்துடன் இந்த பயிற்சி நடத்தப்பட்டது. ஜனவரி, 2018, 2 முதல் 6 வரை நடந்த இப்பயிற்சியில் சுமார் 101 பேர் கலந்து கொண்டனர்.

திரு. யு.கே.பண்டியா, உதவி இயக்குனர், இந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைத்து, எம்.பி.இ.டி.எ. இறால் வளர்ப்பு மற்றும் வளர்ச்சிக்காக செய்துவரும் திட்டங்களை விளக்கினார். திரு.பாவின் எம்.கெரவரா, கள மேற்பார்வையாளர், இறாலின் வாழ்க்கை சுழற்சி மற்றும் குளங்களைத் தயார் செய்யும் முறைகளைக் கூறினார்.

இரண்டாம் நாள், திரு.ரசாக் அலி, உதவி இயக்குனர், இடத்தேர்வு மற்றும் பண்ணையை வடிவமைத்தல் பற்றிய நுட்பங்களை விளக்கினார். திருமதி.எம்.எ.பட்டில், இளநிலை தொழில்நுட்ப அதிகாரி, இறால் குஞ்சு தேர்வு செய்தல், பேக்கிங், இடம் மாற்றுதல், சூழலுக்கேற்ப பாதுகாத்தல், சேமித்தல் மற்றும் தரமான நீர் நிர்வாகம் ஆகியவை குறித்து விவரித்தார். திரு.மாருதி டி யாலிகர், துணை இயக்குனர், பயிற்சி நடக்கும் விதத்தை மேற்பார்வையிட்டார்.

மூன்றாம் நாள், திரு.மாருதி யாலிகர், நோய் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தும் முறைகளை எடுத்துக் கூறினார்.

திரு.பண்டியா மற்றும் கெராவரா நிலங்களைக் குத்தகைக்கு எடுக்கும் முறைகளைக் கூறி, அரசு நிலங்களைப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பத்தை, மாவட்ட ஆட்சியருக்கும், மீன்வளத் துறைக்கும் சமர்ப்பிக்கும் விதத்தை விளக்கினார். மேலும் மீன் வளர்த்தலில் புரோ பயோடிக்களின் பயன்பாடு, ஆன்டிபயாடிக்ஸ்களைத் தவறாகப் பயன்படுத்துதல், மீன் அறுவடை, அறுவடைக்குப் பிறகு மேற்கொள்ள வேண்டிய செய்முறைகள், சந்தைப்படுத்துதல், எச்.எ.சி.சி.பி. போன்ற விவரங்களைக் கூறினார்.



*திரு.மாருதி டி யாலிகர், துணை இயக்குனர், சூரத்தி லுள்ள அபுவில் பண்ணையைப் பார்வையிடச் சென்ற போது வகுப்பு எடுக்கின்றார்.*



*திரு.மாருதி டி யாலிகர், துணை இயக்குனர், சான்றிதழ்களை வழங்கும் காட்சி*

நான்காம் நாளில், பயிற்சியாளர்கள், சுல்தானாபாதிலுள்ள அகு என்ற இடத்தில் அமைந்துள்ள திரு.ரோகன்பாய் படேல் அவர்களுக்குச் சொந்தமான இறால் வளர்ப்புப் பண்ணையைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுடன் திரு.யாலிகர் மற்றும் கெராவரா ஆகியோர் இருந்தனர். இங்கு பண்ணை அமைத்தல், நிர்வாகம், உயிரியல் பாதுகாப்பு முறைகள், சிறந்த நிர்வாக முறைகள், தண்ணீரின் தரத்தை சோதனை செய்வது தொடர்பான நுட்பங்கள் ஆகிய அம்சங்கள் பயிற்சியாளர்களுக்கு கற்பிக்கப்பட்டது. திரு. சுகேது, பண்ணை பொறுப்பாளர், தனது அனுபவங்களைக் கூறி, வன்னமி இறால் வளர்ப்பு முறைகளைக் கூறினார்.

நிறைவு நாளில், திரு.யாலிகர் அகுவாகல்சர் அதாரட்டியின் விதிமுறைகள் மற்றும் லைசென்ஸ் வாங்குவதற்கு விண்ணப்பிக்கும் முறைகளை விளக்கினார். திரு. பண்டியா, எல். வன்னமி வளர்ப்பு முறை மற்றும் உயிரியல் பாதுகாப்பு முறைகள் பற்றி பேசினார். திரு.கெராவரா மீன் வளர்த்தலில் உள்ள பிரிவுகளைக் கூறியதுடன் பயிற்சியாளர்களுக்கு ஒரு தேர்வு நடத்தினார்.

நிறைவு நாள் நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். திரு.யாலிகர் 101 பயிற்சியாளர்களுக்கும் சான்றிதழ்களை வழங்கினார். திரு.கெராவரா நன்றி கூறினார்.

## நவ்சாரி பயிற்சி முகாம்

சுற்றுச் சூழலிற்கேற்ற நிலைத்த இறால் வளர்ப்பு என்ற பொருளில் ஐந்து நாள் பயிற்சி முகாம் ஒன்று ஜனவரி 1 முதல் 5 வரை மாசாவிலுள்ள ஸ்ரீ மகாகாளி மாதா மந்திர் சேவா சமிதி ஹாலில் நடைபெற்றது.

திரு.மாருதி டி.யாலிகர், துணை இயக்குனர், இந்த பயிற்சி முகாமைத் துவக்கி வைத்தார். அவர் வந்திருந்த பயிற்சியாளர்களை இது போன்ற பயிற்சி வகுப்புகளைத் தவறவிடாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். திரு.யு.கே.பண்டியா, உதவி இயக்குனர், குஜராத்தில் குறிப்பாக நவ்சாரி மாவட்டத்தில் சுற்றுச் சூழலிற்கேற்ற நிலையான இறால் வளர்ப்பின் தற்போதைய நிலையை எடுத்துக் கூறினார். திரு.பாவின் எம்.கெராவரா, இறாலின்

வாழ்க்கைச் சுழற்சி மற்றும் குளங்களை அமைக்கும் விதம் பற்றி எடுத்துக் கூறினார்.

இரண்டாம் நாள், திரு.ரசாக் அலி, உதவி இயக்குனர், இடத்தேர்வு மற்றும் பண்ணையை வடிவமைத்தல் பற்றிய நுட்பங்களை விளக்கினார். திருமதி.எம்.எ.பட்டில், இளநிலை தொழில்நுட்ப அதிகாரி, பேக்கிங், எடுத்துச் செல்லுதல், சூழலுக்கேற்ப பாதுகாத்தல், சேமித்தல் மற்றும் தரமான தண்ணீர் நிர்வாகம் ஆகியவை குறித்து விவரித்தார்.

மூன்றாம் நாளில், திரு.பண்டியா மற்றும் கொராவரா தீவன நிர்வாகம், தினமும் கவனிக்கும் விதம், தண்ணீரின் தரத்தை கவனிப்பது, நோய் தடுப்பு முறைகள், மேலும் மீன் வளர்த்தலில் புரோ பயோடிக்களின் பயன்பாடு, ஆன்டிபயாடிக்ஸ்களைத் தவறாகப் பயன்படுத்துதல், மீன் அறுவடை, அறுவடைக்குப் பிறகு மேற்கொள்ள வேண்டிய செய்முறைகள், மார்க்கெட்டிங், எச்.எ.சி.சி.பி. போன்ற விவரங்களைக் கூறினார். மேலும் நிலங்களைக் குத்தகைக்கு எடுக்கும் முறைகள், எல்.வண்ணமேய் மற்றும் பி.மொனோடன், ஆகிய இரண்டிற்குமுள்ள வேறுபாட்டைக் கூறினார். எல்.வன்னமி உயிரியல் பாதுகாப்பின் அவசியம் மற்றும் இ.டி.எஸ்.சின் தேவைகள் குறித்து எடுத்துக் கூறினார்.

நான்காம் நாளில், பயிற்சியாளர்கள், நவ்சாரி மாவட்டத்தில் பனார் கிராமத்திலுள்ள திரு.நீலேஷ் பாயின் இறால் பண்ணையைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர். திரு.நீலேஷ் இறால் பண்ணை அமைப்பதிலுள்ள நடைமுறைகளான பண்ணை அமைத்து நிர்வாகம் செய்தல், உயிரியல் பாதுகாப்பு முறைகள்,



*பனார் கிராமத்திலுள்ள திரு.நீலேஷ் பாயின் இறால் பண்ணையைப் பார்வையிடும் பயிற்சியாளர்கள்*

சிறந்த நிர்வாக முறைகள், தண்ணீரின் தரத்தை சோதனை செய்வது தொடர்பான நுட்பங்கள் ஆகிய அம்சங்கள் பயிற்சியாளர்களுக்கு கற்பிக்கப்பட்டது. திரு. அமித் படேல், இறால் பண்ணை உரிமையாளர், தனது அனுபவங்களைக் கூறினார்.

நிறைவு நாளில், திரு.பண்டியா, அகுவாகல்சர் அதாரட்டியின் விதிமுறைகள் மற்றும் சி.சி.எ. லைசென்ஸ் வாங்குவதற்கு விண்ணப்பிக்கும் முறைகளை விளக்கினார். திரு.கொராவரா மீன் வளர்த்தலில்உள்ளபிரிவுகளைக்கூறியதுடன்பயிற்சியாளர்களுக்கு ஒரு தேர்வு நடத்தினார். மேலும் பயிற்சியாளர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு உரிய விவரங்களை அளித்தார்.

நிறைவு நாளில் திரு.யாலிகர் 152 பயிற்சியாளர்களுக்கும் சான்றிதழ்களை வழங்கினார். திரு.பாந்தியா நன்றி கூறினார்.

# மீன் வளர்ப்பில் காலநிலை மாற்றத்தின் தாக்கம்

சி.எம்.எஃப்.ஆர்.ஐ.யின் 71வது நிறுவன தினத்தின் போது நடைபெற்ற ஒரு கண்காட்சி மற்றும் பயிற்சி திட்டத்தில் மீன் வளர்ப்பில் கால நிலை மாற்றத்தின் தாக்கம் குறித்து விவாதிக்கப்பட்டது. பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக காலநிலை மாற்றம் தொடர்பாக நேஷனல் இன்னோவேசன்ஸ் ஆன் கிளைமேட் ரெசிலியண்ட் அக்ரிகல்சரின் கீழ் நடத்திய ஆய்வுகளின் வெளிப்பாடுகளை காட்சிக்கு வைத்திருந்தது.

மீன்பிடித்துறையில் நிகழ்ந்திருக்கும் சமீபத்திய மாற்றங்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் வந்திருந்த பார்வையாளர்களுக்கு, கடல் ஆராய்ச்சி, கடல் சுற்றுச் சூழலில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள், கடலின் மேற்பரப்பில் ஏற்பட்டுள்ள வெப்பநிலை, குளோரோபைலா, காற்று மற்றும் மழை அளவு, கடலின் தற்போதைய நிலவரம், இனப்பெருக்க காலம், முதிர்ச்சியடைதல், விநியோகம் மற்றும் கால நிலை மாற்றத்தால் கடல் மீன்களின் நிலைப்பாடு போன்றவற்றை விஞ்ஞானிகள் விளக்கிக் கூறினர்.

வர்த்தக முக்கியத்துவம் பெற்ற மீன்களின் வளத்தில் மாற்றம் வந்ததால் மீன்பிடித்தலில் மட்டுமின்றி மக்களின் வாழ்விலும், தேசிய பொருளாதாரத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. என்.ஐ.சி.ஆர்.எ.வின் திட்ட ஒருங்கமைப்பாளர் பி.யு.சாகாரியா கூறும்போது, காலநிலை மாற்றமும் மீன்பிடித்தலில் ஏற்பட்ட அழுத்தமான நிலையும் மீன் வளத்தில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்றார். மீன் பிடித்தலிலுள்ள முயற்சிகளைக் குறைத்தல், மாங்குரோவ்களை வளர்த்தல், கடல் பாசிகளை வளர்த்தல், தொட்டிகளில் மீன் வளர்த்தல் போன்ற முறைகளே இப்போதையத் தேவை என்று கூறினார்.

என்.ஐ.சி.ஆர்.எ.யின் ஆய்வறிக்கையின்படி அளவிற்கதிகமான மீன் பிடித்தல் மற்றும் காலநிலை மாற்றத்தால் நேரிடும் மாற்றங்கள் போன்றவற்றை கண்காணிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார். மேலும் மாணவர்களும் பொதுமக்களும் கடல் சார்ந்த வாழ்வியல் ரகசியங்களை அறிந்து கொள்ள இந்த கண்காட்சி ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்தது எனலாம். நேனல் மெரைன் பயோ டைவர்சிட்டி மியூசியம், நவீனமயமான ஆய்வகங்கள், மெரைன் ரிசர்ச் அகுவாரியம், அக்ரிகல்சுரல் டெக்னாலஜி இன்பர்மேசன் சென்டர் மற்றும் மீன் வளர்ப்பகங்கள் போன்றவை பார்வையாளர்களுக்கு திறந்து வைக்கப்பட்டது. தண்ணீரில் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொட்டுவதால் நேரிடும் தீங்குகள் பற்றி பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. அருங்காட்சியகம் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது.

# எம்.பி.இ.டி.எ.வின் விஜயவாடா மண்டல அலுவலகம் நடத்திய பயிற்சி முகாம்

ஆந்திரப்பிரதேச மாநிலம் பிரகாசம் மாவட்டத்தில், சின்னகாஞ்சம் மண்டலில் ராஜுபங்காரு பாலேம் கிராமத்தில், இறால் வளர்ப்பில் சிறந்த நிர்வாக முறைகள் மற்றும் மீன்வளர்த்தலில் உள்ள பல்வேறு முறைகள் பற்றிய மூன்று நாள் பயிற்சி முகாம் டிசம்பர் 13-15, 2017 தேதிகளில் நடைபெற்றது. இந்த பயிற்சியை எம்.பி,இ,டி.எ.வின் விஜயவாடா மண்டல அலுவலகம் ஏற்பாடு செய்திருந்தது. சுமார் 20 விவசாயிகள் இதில் கலந்து கொண்டனர்.

திரு.துன்னா எடுகொண்டலு, ராஜுபங்காரு பாலேம் கிராமத் தின் பஞ்சாயத்துத் தலைவர் இந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். திரு.ஆர்ச்சிமான் லகிரி, துணை இயக்குனர், திரு.பி. நரசிம்ம ராவ், உதவி இயக்குனர், திரு.டி.நந்த கிஷோர், மண்டல ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஜி.ஸ்ரீனிவாசுலு, கள மேற்பார்வையாளர் ஆகியோர் குளம் அமைப்பது, தீவனம், நிர்வாகம், மீன் வளர்த்தலில் உள்ள பல்வேறு முறைகள் மற்றும் ஆந்திரமாநிலத்தில் அவற்றின் அவசியம் என்பது போன்ற



*திரு.ஆர்ச்சிமான் லகிரி, துணை இயக்குனர், ராஜுபங்காரு பாலேம் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில் வகுப்பு எடுக்கும் காட்சி*

தலைப்புகளில் விவசாயிகளுக்கு வகுப்புகள் எடுத்தனர்.

திரு.துன்னா எடுகொண்டலு, இது போன்ற பயனுள்ள பயிற்சி முகாமை ஏற்பாடு செய்தமைக்காக எம்.பி.இ.டி.வைப் பாராட்டியதோடு எதிர்காலத்திலும் இது போன்ற பயிற்சி வகுப்புகளை விவசாயிகளுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்களும், ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது.

ஜி.ஸ்ரீனிவாசுலு, கள மேற்பார்வையாளர், விழா நிறைவின் போது நன்றி கூறினார்.

## சுற்றுச் சூழலுக்கேற்ற மற்றும் நீர் உயிரின வளர்த்தலில் அபிவிருத்திக்கான வாய்ப்புகள்

எம்.பி.இ.டி.எ.வின் விஜயவாடாவிலுள்ள மண்டல அலுவலகம் சுற்றுச் சூழலுக்கேற்ற, மற்றும் மீன் வளர்த்தலில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் பற்றிய மூன்று நாள் பயிற்சி முகாமை டிசம்பர் 6-8,2017 தேதிகளில் குண்டூர் மாவட்டத்தில் நிஜாம்பட்டணம் மண்டலில், அடவுலாதீவி கிராமத்தில் நடத்தியது. சுமார் 20 பேர் இதில் கலந்து கொண்டனர்.



*திரு.ஆர்ச்சிமான் லகிரி, துணை இயக்குனர், அடவுலாதீவி கிராமத்தில் நடைபெற்ற மூன்று நாள் பயிற்சி முகாமில் வகுப்பு எடுக்கும் காட்சி.*

திருமதி. சோண்டி ரேணுகா, பஞ்சாயத்துத் தலைமை, அட்வுலாதீவி கிராமம், இந்த பயிற்சியைத் துவக்கி வைத்தார். திரு.ஆர்ச்சிமான் லகிரி, துணை இயக்குனர், திரு.வி.ரத்ன பிரகாஷ், திட்ட உதவியாளர் (மீன் வளம்), கே.வி.கே.கானுரு, திரு.கே.ஸ்ரீனிவாஸ் நாயக், உதவி இயக்குனர், மீன் வளர்த்தல், நிஜாம்பட்டணம், திரு.டி.நந்த கிஷோர், மண்டல ஒருங்கிணைப்பாளர், திரு.ஜி.ஸ்ரீனிவாசுலு மற்றும் எஸ்.வேணு கோபால் ராவ், கள மேற்பார்வையாளர், ஆகியோர் குளங்களைத் தயார்ப் படுத்துதல், தண்ணீர் மற்றும் மண் தரப்பரிசோதனை, தரமான குஞ்சுகளைச் சேகரித்தல், தீவன நிர்வாகம், புரோபயோடிக்களை இறால் பண்ணைகளில் பயன்படுத்துதல், உயிரியல் பாதுகாப்பு முறைகள், மீன் வளர்த்தலிலுள்ள பல்வேறு முறைகள் மற்றும் ஆந்திரபிரதேசத்தில் அதற்கான வாய்ப்புகள், அறுவடை, அறுவடைக்குப் பிறகு செய்ய வேண்டிய செய்முறைகள், அறுவடைக்கு முன் செய்ய வேண்டிய சோதனை மற்றும் ஆரோக்கிய கவனிப்பு போன்ற தலைப்புகளில் வகுப்புகளை எடுத்தனர்.

திரு.ஜி.ஸ்ரீனிவாசுலு, கள மேற்பார்வையாளர் நன்றி கூறினார்.

# எஸ்.சி./எஸ்.டி. பயனீட்டாளர்களுக்கு சிறந்த நிர்வாக முறைப் பயிற்சி

எம்.பி.இ.டி.எ.வின் விஜயவாடாவிலுள்ள மண்டல அலுவலகம் சுற்றுச் சூழலுக்கேற்ற மற்றும் மீன் வளர்த்தலில் அபிவிருத்திக்கான வாய்ப்புகள் பற்றிய மூன்று நாள் பயிற்சி முகாமை டிசம்பர் 11-15, 2017 தேதிகளில் குண்டூர் மாவட்டத்தில் நிஜாம்பட்டணம் மண்டலில், கோகர்னமாத்தம் கிராமத்தில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் பிரிவைச் சேர்ந்தவர்களுக்காக நடத்தியது. சுமார் 20 பேர் இதில் கலந்து கொண்டனர்.



திருமதி.மோபிதேவி விஜய நிர்மலா, நிஜாம்பட்டணம் கிராமப் பஞ்சாயத்துத் தலைமை நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். திரு.ஆர்ச்சிமான் லகிரி, துணை இயக்குனர், திரு. பி.நரசிம்ம ராவ், உதவிஇயக்குனர், திரு.கே.ஸ்ரீனிவாஸ் நாயக், உதவி இயக்குனர், மீன் வளர்த்தல், நிஜாம்பட்டணம், திரு. எஸ்.வேணு கோபால் ராவ், கள மேற்பார்வையாளர், ஆகியோர் குளங்களைத் தயார்ப் படுத்துதல், தண்ணீர் மற்றும் மண் தரப்பரிசோதனை, தரமான வித்துகளைச் சேகரித்தல், தீவன நிர்வாகம், புரோபயோடிக்களை இறால் பண்ணைகளில் பயன்படுத்துதல், உயிரியல் பாதுகாப்பு முறைகள், மீன் வளர்த்தலிலுள்ள பல்வேறு முறைகள் மற்றும் ஆந்திரபிரதேசத்தில் அதற்கான வாய்ப்புகள், அறுவடை, அறுவடைக்குப் பிறகு செய்ய வேண்டிய செய்முறைகள், அறுவடைக்கு முன் செய்ய வேண்டிய சோதனை மற்றும் ஆரோக்கிய கவனிப்பு போன்ற தலைப்புகளில் வகுப்புகளை எடுத்தனர்.

திரு.எஸ்.வேணு கோபால்ராவ், கள மேற்பார்வையாளர் நன்றி கூறினார்.



## கார்வாரில் சுற்றுச் சூழலிற்கேற்ற இறால் வளர்ப்பு மற்றும் பலமுறைகளில் மீன் வளர்த்தல் பயிற்சி

எம்.பி.இ.டி.எ.வின் கார்வாரிலுள்ள உப மண்டல அலுவலகம் கடந்த ஜனவரி 17-19, 2018 தேதிகளில் எஸ்.சி./ எஸ்/டி பிரிவைச் சேர்ந்த இளைஞர்களுக்கு சுற்றுச் சூழலுக்கேற்ற இறால் வளர்ப்பு மற்றும் மீன்வளர்த்தலில் உள்ள பல முறைகளை எடுத்துக் கூறுவதற்காக பயிற்சி வகுப்பு ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தது. பாட் கிராமத்திலுள்ள டாக்டர். அம்பேத்கார் ஹாலில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சிறந்த நிர்வாகச் செய்முறைகள், விஞ்ஞான முறையில் நிலையான ஏற்றுமதிக்கேற்ற களி நண்டு, கொடுவா மீன், ஜிலேப்பி கெண்டை போன்ற ரகங்களை வளர்க்கும் முறைகள் விளக்கப்பட்டன.

கார்வார் நகர சபை கவுன்சிலின் வேண்டுதலின் பேரில் இந்த பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. பாட், நந்தன்கட்டா, உத்ர கன்னட மாவட்டத்தின் கார்வார் போன்ற இடங்களிலிருந்து 20 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.



திரு.தேவானந் கனேகர், தலைவர், எஸ்.சி /எஸ்.டி சமுதாயம் கார்வார் இந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். அவர் பேசும்போது மீன்வளர்ப்புத் தொழில் பலருக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதாகும் மேலும் விவசாயிகளை பொருளாதார நிலையில் உயர்த்தும் தன்மை கொண்டது என்றும் கூறினார்.

திரு.எச்.எம்.சிரோத்கர், இளநிலை தொழில்நுட்ப அலுவலர், திரு.விஜயக்குமார் யாலிகர், துணை இயக்குனர், திரு.வெங்கட் ராமன் ஹெக்டே, துணை இயக்குனர், மற்றும் திரு.ஸ்ரீபத் குல்கர்னி, எ.எஃப்.டி.ஓ. மாநில மீன்வளத்துறை ஆகியோர் வகுப்புகளை எடுத்தனர். இதில், மீன் வளர்ப்பிற்கான இடத்தேர்வு, குளத்தை வடிவமைத்தல், கட்டமைப்பு, உயிரியல் தன்மைகள், குஞ்சு சேகரிப்பு, அறுவடை, உயிரியல் பாதுகாப்பு, மற்றும் இறால்



வளப்பில் கடப்பிடிக்க வேண்டிய சிறந்த செய்முறைகள், நண்டு வளர்த்தலிலுள்ள பலமுறைகள், கொடுவா வளர்ப்பு, ஜிலேப்பி கெண்டை வளர்ப்பு, நிதி உதவி, மற்றும் பொருளாதார அனுகூலம் போன்ற தலைப்புகளில் வகுப்புகள் எடுக்கப்பட்டன.

இரண்டாம் நாள், மடிபாக் கிராமத்திலுள்ள இறால் பண்ணை ஒன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு நடைமுறையான செயல் முறைகளை பண்ணை உரிமையாளர் மற்றும் தொழில் நுட்ப அலுவலர்களும் கூறக்கேட்டனர்.

நிகழ்ச்சி நிறைவு நாளில் திருமதி.லீலாபாய் தானேகர், துணைத் தலைமை, நகர முனிசிபல் கவுன்சில், எம்.பி.இ.டி.எ.வின் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு குறித்த தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார். ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களைத் தேடிவந்து இது போன்ற பயனுள்ள பயிற்சியை வழங்கியது நல்ல பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் ஒன்றாகும் என்று கூறியவர், பயிற்சி பெற்றவர்களும் இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அரசு சார்ந்த நிலங்களை குத்தகைக்கு வாங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார். திரு.விஜயக் குமார் யாரகல், துணை இயக்குனர், எம்.பி.இ.டி.எ.வின் ஆதரவு எப்போதும் கிடைக்கும் என்று உறுதி கூறினார்.

திரு.விதல் லான்சேகர் மற்றும் திருமதி.ரூபா ஹல்சாவ், விவசாயிகளின் சார்பில் எம்.பி.இ.டி.எ.விற்கு நன்றி கூறி, இந்த பயிற்சியின் மூலமாக புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது என்று கூறினார்.சான்றிதழ்களும், ஊக்கத்தொகையும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது. திரு.எஸ்.எம்.சிரோத்கர், இளநிலை டெக்னிக்கல் அதிகாரி, நன்றி கூறினார்.

# எம்.பி.இ.டி.எ. சுவிட்சர்லாந்தின் கோஆப் இணைந்து நடத்தும் ஆர்கானிக் மீன் பண்ணை

ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்து வரும் ஆர்கானிக் மீன்களுக்கான தேவையைச் சமாளிக்கும் நோக்கத்தில் சுவிட்சர்லாந்தின் மிகப்பெரிய சில்லறை மற்றும் மொத்த விற்பனை நிறுவனமான கோஆப், எம்.பி.இ.டி.எவுடன் இணைந்து இந்தியாவில் ஏற்றுமதித் தரமிக்க ஆர்கானிக் மீன்களை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

எம்.பி.இ.டி.எ. இதற்கான தொழில் மற்றும் வெளிநாட்டு வரைமுறைகளுக்குட்பட்டு உயர்தரமான ஆர்கானிக் மீன்களை வளர்ப்பதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும்.

கோ ஆப் சுவிட்சர்லாந்து முழுவதுமாக சுமார் 2200 விற்பனை மையங்களை அமைத்து விற்பனை மற்றும் உற்பத்தியில் கவனம் செலுத்திவரும் நிறுவனம், ஆர்கானிக் மீன்களுக்கு 15 சதவீதம் அதிக விலை தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேலும் ஐந்து சதம் நிதி உதவி மற்றும் விரிவாக்க செயல்கள் மற்றும் பயிற்சிகள் தருவதற்காகத் தர இசைந்துள்ளது.

இதன் ஆரம்பகட்ட வேலைகள் கேரளாவில் துவங்கவுள்ளது. இங்கு ஆர்கானிக் கருப்பு இறாலை 1000 ஹெக்டேர் பரப்பில் செய்ய திட்டமிட்டுள்ளது. இதன் வெற்றியைத் தொடர்ந்து இந்த திட்டம் இந்தியா முழுவதுமாக பல இடங்களில் தொடங்கப்படும்.

இது குறித்து எம்.பி.இ.டி.வின் தலைவர் Dr.எ.ஜெயத் திலக் இ.ஆ.ப. கூறும் போது ஐரோப்பிய நாடுகளில் ஆர்கானிக் பொருட்களின் மீது ஆர்வம் ஏற்பட்டுள்ளது. பலரும் ஆர்கானிக் உற்பத்தியில் ஈடுபடத் தயக்கம் காட்டுவது அதில் ஏற்படும் அதிகப்படியான செலவை மனதில் கொண்டாகும். இதுபோல் அதிக விலை கொடுத்து வாங்கிட முன்வருவதால் அதிக செலவைச் சமாளிக்க ஏதுவாக இருக்கும் மேலும் இந்த ஆர்கானிக் மீன் உற்பத்தியில் ஈடுபட பலருக்கும் ஆர்வம் ஏற்படும் என்று கூறினார்.

எம்.பி.இ.டி.எ & கோஆப், இறால் குஞ்சு உற்பத்திக்கான சான்றிதழ் மற்றும் சிறிய அளவிலான ஆர்கானிக் மீன் தீவன மில்களுக்கு சான்றளித்து அவற்றை வகைப் படுத்தித் தரும்.

ஜெரால்ட் ஜர்லுட்டர் கோஆப் மேனேஜ்மெண்ட் மெம்பர் கூறும் போது வியட்னாமைத் தொடர்ந்து இந்தியாவில் தாங்கள் அடியெடுத்து வைத்துள்ளதாகவும், அங்குள்ள ஆர்கானிக் மீன் உற்பத்தியாளர்கள் மற்ற மீன் உற்பத்தியாளர்களைவிட அதிகமான வருமானம் பெற்று வருவதாகவும் கூறினார்.

# வெப்ப மண்டல கல்லிறால் வளர்ப்பு: இந்தியாவிற்கு வளம் தரும் தொழில்

**Dr. Sagiv Kolkovski**
Nutrakol Pty Ltd, World Aquaculture Society,
E-mail: infonutrakol.com



*தொட்டியிலுள்ள இறால் (மார்கெட் சைஸ்)*

வெப்பமண்டல கல் இறால் என்பது சைனா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் ஒரு கிலோவிற்கு அமெரிக்க டாலர் 100 வரை கிடைக்கும் லாபகரமான தொழிலாக அமைந்துள்ளது. அதிகரித்துவரும் தேவைக்கேற்ப இந்த வகை இறால் வளர்ப்பு என்பது முன்பே துவங்கியிருக்க வேண்டியதாகும். கல் இறால் வளர்ப்பு என்பது உலக அளவில் ஒரே இடத்தில் அல்லது குறைந்து வருவதற்குக் காரணம் மோசமான நிர்வாக முறைகளேயாகும். இதற்கு மாறிவரும் காலநிலை மற்றும் பழக்க வழக்கங்களும் காரணமாகலாம்.

கல் இறால்களின் வாழ்க்கைச் சுழற்சிமுறை நிறைவுற்றது மற்றும் பெரிய அளவிலான குஞ்சுகளைப் பெருக்கம் செய்வது மற்றும் நிலையான வளர்ப்பு முறைகள் இல்லாமல் போனது மற்றும் லார்வா பருவத்தின் கால நீட்சி, லார்வாக்களின் மிக நுண்ணிய தன்மை போன்ற உயிரியல் தடைகள் இருந்தன. தற்போது இந்தி யாவில் மட்டுமல்ல உலக அளவிலும் வர்த்தக ரீதியிலான வெப்ப மண்டல கல் இறால்களின் பெருலஸ் கிடைப்பதில்லை. எனவே, இறால் வளர்ப்பு என்பதை இயற்கையில் கிடக்கும் பேபி கல் இறால்களின் மூலமாக அல்லது கல் இறால் குஞ்சுகள் அல்லது பெருலி மூலமாக வளர்த்து மார்க்கெட் செய்யும் அளவிற்கு பெருக்குவதற்கான முயற்சிகள் உள்ளன. உலகின் பல நாடுகளிலும் இவ்வாறான கல் இறால் வளர்த்தல் என்பது வர்த்தக ரீதியான முறையில் நடைபெற்று வருகின்றன.

கடந்த பல ஆண்டுகளில் ஆசியாவில் பல நாடுகளிலும், வியட்நாம், இந்தோனேசியா, பிலிபைன்ஸ், மற்றும் மலேசியா நாடுகளிலும் வெப்ப மண்டல இறால் பெருலஸ் அபிவிருத்தி செய்யப்பட்டது. சைனா, தாய்லாந்து மற்றும் இந்தியாவிலும் இறால் வளர்ப்பு பிரபலமாகி வருகிறது.


வியட்நாம் ஒரு ஆண்டிற்கு 1,500 டன் இறால் உற்பத்தி செய்கிறது. இரண்டாம் நிலையில் இந்தோனேசியா 24-40 டன் உற்பத்தி செய்கிறது. இந்தோனேசியாவில் 200 கிராமிற்கும் குறைவாக கல் இறால் வளர்த்தல் என்பது சட்டத்திற்குப்

புறம்பானதாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் இந்த குறைந்த அளவு வர்த்தகத்தின் வளர்ச்சியைக் குறைத்து விடும் என்று கருதப்படுகிறது.

முதலில் இரண்டு வெப்பமண்டல ரகங்களான பெனுலிரஸ் மற்றும் பி.ஹோமோரஸ் என்பவை தென் கிழக்கு ஆசியாவில் சேகரிக்கப்பட்டது. இந்த இனங்களுக்கான விகிதம் பகுதிக்குப் பகுதி மாறுபடும். வியட்னாமில் பி.ஓர்னாடஸ் 75 சதவீதமும், பி.ஹோமோரஸ் 25 சதவீதமும் இருக்கும்போது இந்தோனேசியாவில் அதிகப்படியாகக் கிடைப்பது பி.ஹோமோரஸ் ஆகும். உயிருடனுள்ள இறாலின் விலை அமெரிக்க டாலரில் 100 ஆகும். இது முக்கியமாக சைனாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## சேகரிப்பு

பெருலசை சேகரிக்க பல முறைகள் பின்பற்றப்படுகின்றன. சீனி வலைகள், இரவு நேரங்களில் வெளிச்சம் தருவது, மிகச் சிறிய வலைகள், கலெக்டர்கள் மற்றும் லேடர் டிராப்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி சேகரிக்கலாம். வியட்னாமில் 2-4 மில்லியனும், இந்தோனேசியாவில் 0.6 - 5 மில்லியனும் ஒரு ஆண்டில்



*லாப்ஸ்டர் நர்சரித் தொட்டி*

பிடிக்கப்படுகிறது. பெரும்பாலான பெருலஸ்கள் பாதுகாப்பான பகுதிகளான வளைகுடாக்களில் கிடைக்கிறது. மோசமான கையாளுதல் காரணமாக அதிகப்படியான சேதாரம் ஏற்படுகிறது.

## நர்சரி

இதற்கான நர்சரி எனபது ஆழமற்ற இடத்தில் மிதக்கும்படியான கூடுகளில் நிர்வகிக்கப்படுவதாகும். பெருலஸ்கள் 30-50 கிராம் எடை வரும் வரை வளர்க்கப்படும். இதற்குத் தீவனமாக கழிவு மீன்களை துண்டங்களாக்கி இடுவர். இதில் 30-70 சதவீதம் உயிர்வாழும். தேவையான எடையை அடைந்ததும் குஞ்சு இறால்கள் பெரிய அளவுத் தொட்டிகளில் இடப்பட்டு ஆழ்கடல் பகுதிகளில் வளர்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். இங்கு கழிவு மீன் துண்டுகள் தீவனமாக இடப்படுகிறது. இதில் 5 முதல் 70 சதம் வரை உயிர்வாழும் சதவீதம் இருக்கும். இருபது மாதங்களில் 50 கிராமிலிருந்து ஒரு கிலோ வளர்ச்சி ஏற்படும். பி.ஆர்னேட்டஸ் ஒரு கிலோ எடையை அடையும் அதே போல் பி. ஹோமாரஸ் 500 கிராம் எடை வரை வளரும். மீன்கள் விறபனைக்கான பருவத்தை அடைந்ததும் அவை உயிருடன் சைனாவிற்கு கப்பலில் அனுப்பி



*லாப்ஸ்டர் வளரும் நிலை*

வைக்கப்படுகிறது.

வியட்நாமில் இறால் வளர்ப்புப் பண்ணை அல்லது கொழுக்கவைக்கும் தொழில் பல பிரிவுகளில் நடைபெறுகிறது.

1. பெருலஸ் குஞ்சு மீன் பிடித்தல்: பெருலஸ் அதிகம் காணப்படும் இடங்களில் அவற்றை கிராமத்திலுள்ள மீனவர்கள் சேகரிப்பார்கள்.
2. குஞ்சு மீன் விற்பனையாளர்கள் / இடைத்தரகர்கள் குஞ்சுகளை வாங்கி நர்சரி இடத்திற்கு அனுப்பி வைப்பார்கள். சமீப காலங்களில் அதிகத் தேவையுள்ளதால் சட்டத்திற்குப் புறம்பாக இந்தோனேசியாவிலிருந்து அனுப்பி வைக்கப் படுகிறது.
3. நர்சரி விவசாயம்: கடற்கரைக்கு அருகில் சிறிய தொட்டிகளில் வளர்ப்பது. இடைத்தரகர்களிடமிருந்து இதை செயல் படுத்துபவர்கள் வாங்கிக் கொள்வார்கள்.
4. குரோ அவுட் ஃபார்மிங்: விவசாயிகள் குஞ்சுகளை நர்சரிகளிலிருந்தோ அல்லது சொந்தமாகவோ வளர்ச்சியடைய பெரிய தொட்டிகளுக்கு மாற்றுகின்றனர்.
5. தீவனம் சப்ளை செய்பவர்கள், கருவிகள் விநியோகம், மொத்த வியாபாரிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள்.

## நோய்கள்

பால் நோய், வால் அழுகல், மேலும் மற்ற நோய்கள் கழிவு மீன்களைக் கொடுத்து ஆழமற்ற தண்ணீர்ப் பகுதிகளில் வளர்ப்பதால் தொட்டிகளில் படியும் ஆர்கானிக் பொருட்கள், சுகாதார நிர்வாகம் மற்றும் பல காரணங்களால் குஞ்சுகள் உயிர்வாழும் தன்மை மாறுபடும். வியட்நாமில் 70 சதவீத மீன்கள் உயிருடன்



*பெரூலஸ் வெப்பமண்டல இறால் (வியட்னாம் மற்றும் இந்தோனேசியாவில் சேகரிக்கப்பட்டது)*

இருக்கும் என்று கூறப்படுகிறது. இந்தோனேசியாவில் இது 30 சதவீதமேயாகும்.

## பெரூலஸ் சேதாரம்

பெரூலஸ் சேகரித்த பிறகு ஏற்படும் சேதாரங்களுக்குக் காரணம் பேக்கிங், கையாளுதல், சுற்றுச்சூழல் மாற்றம் மற்றும் டிரான்ஸ்போர்டேசன் போன்றவையே காரணமாகும்.

## கழிவு மீன் கொடுப்பதால் பிரச்னைகள்

கல் இறால் வளர்க்கும்போது கழிவு மீன்களைத் தீவன மாகக் கொடுப்பதால் பேக்டீரியாக்களின் பெருக்கம் ஏற்பட்டு நோய்



இரால் குஞ்சு

உருவாகும் நிலை உருவாவதால் பலத்த சேதாரம் ஏற்படுகிறது.

## இந்தியா

வெப்பமண்டல இரால் வளர்ப்பு என்பது இந்தியாவில் மிகச் சிறிய அளவிலும், வளர்ச்சியடையாமலும் உள்ளது. ஒரு வருடத் திற்கு 65 டன் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இறாலை மைய மாக்கிய மீன் வளர்ப்பு மிகக் குறைவாகும். பெரும்பாலான இறால் பிடிப்பதன் மூலமாக மட்டுமே கிடைக்கிறது. இதில் முக்கியமான ரகங்கள் பெனுலிரஸ் ஆர்னேட்டஸ் மற்றும் பி.ஹோமாரஸ் என்பன வாகும். வேறு பல ரகங்களும் இருப்பதாகத் தகவல்கள் உள்ளது. சமீபத்தில் சிறிய அளவிலான கல் இறால் குஞ்சுகளை வளர்க்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. இதில் அபிவிருத்தி உள்ளதாகவும் கூறப்படுகிறது. தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் 40-60 கிராம் எடையுள்ள பி.ஹோமாரஸ் ரக குஞ்சுகளை இரண்டு வேறுபட்ட தொட்டிகளான ஸ்டீல் அல்லது பிளாஸ்டிக்கில் வைத்து கழிவு மீன்துண்டுகளை தீவனமாக்கி வளர்க்கப்பட்டது. ஐந்து மாத வளர்ச்சிக்குப் பிறகு 95 சதவீதம் உயிரோடு இருந்தன. இதில் ஒரு அறுவடைக்கு ரூ.30,000 - 54,000 நிகர லாபம் கிடைத்துள்ளது. குஜராத்தில் வித்தியாசமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பனிலிரஸ் பாலிபேகஸ் சராசரி 100 கிராம்



*லாப்ஸ்டர் மீன்பிடி படகு (இரவு நேர பிடித்தலுக்காக விளக்குகள் அமைக்கப்பட்ட படகு)*

எடையுள்ளவை வலைகளில் பிடிக்கப்பட்டு சேறு நிரம்பிய குழிகளில் விடப்பட்டது. மூன்று மாதகால வளர்ச்சிக்குப் பிறகு எடை 250-300 கிராம் இருந்தது. ஒரு கிலோவிற்கு ரூ.1000/- வரை விலை கிடைத்தது. இதுபோன்ற சோதனைகளால் இதுவரை முயற்சிக்காத இந்த தொழிலின் வளம் தெரிய வந்துள்ளது.

## எதிர்கால வழிமுறைகள்

பல மாநிலங்களிலும் பல்வேறு இடங்களில் வெப்ப மண்டல கல் இறால் வளர்ப்பை தென்னிந்தியாவிலிருந்து பெறப்பட்ட குஞ்சுகளிலிருந்து நீரில் மிதக்கும் தொட்டிகளில் வளர்த்து பெருக்க வேண்டும் என்ற ஆலோசனை நிலவில் உள்ளது. இந்தத் திட்டங்கள் பெரூலஸ் அல்லது இறால் குஞ்சுகளை சேகரித்து அவற்றைக் கையாண்டு, வேறு இடங்களுக்கு கொண்டு சென்று, அதிக சேதாரமில்லாமல் வளர்த்து, நல்ல ஊட்டமான தீவனங்களைக் கொடுத்து, நவீன முறையில் வளர்ப்பதாகும். இதில் கழிவு மீன்களைத் தீவனமாகக் கொடுப்பதைத் தவிர்த்து அல்லது குறைத்து நோய்த் தாக்கம் இல்லாத வகையில் பாதுகாக்க வேண்டும் என்பதாகும்.

# மீன் நோய்களைக் கண்டறியும் விலைக் குறைவான உபகரணங்கள் இந்தியாவில் அறிமுகம்

இந்தியாவில் நன்னீர் மீன் வளர்ப்பில் நோய் தாக்கம் காரணமாக 25 சதவீதம் இழப்பு ஏற்படுகிறது. இதனைத் தடுப்பதற்காக சென்ரல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பிரஷ்வாட்டர் அக்குவாகல்சர், (சி.ஐ.எஃப்.எ) மீன் வளர்ப்பின்போது ஏற்படும் பேக்டீரியல் நோய்களைக் கண்டறிவதற்காக விலைக் குறைவான கிட் ஒன்றை உருவாக்கியுள்ளது.

சி.ஐ.எஃப்.எ.வின் முதுநிலை விஞ்ஞானி பிரியபிரத்த சுவைன் கூறும் போது ஸ்பாட் ஆக்ளுடினேசன் மற்றும் ஸ்பாட் எலிசா கிட் என்பவை மீன் வளர்ப்பவர்கள் பயன்படுத்தி மீன்களில் பேக்டீரியல் தாக்குதல் உள்ளதா மற்றும் மீன்களின் ஆரோக்கிய நிலை போன்றவற்றை தெரிந்து கொள்ள முடியும் என்றார்.

இம்முறையில் உயிருடன் உள்ள மீன்களின் இரத்தத்தைப் பரிசோதனை செய்வதன் மூலம் நோய்தாக்குதல் களைக் கண்டறிய முடியும். இறந்த மீன்களை ஆய்வகங்களுக்கு எடுத்துச் சென்று மட்டுமே சோதனை செய்ய முடியும். இவ்வாறு முன்கூட்டியே நோய்களைக் கண்டறிந்து கொள்வதால் உரிய நேரத்தில் அவற்றைத் தடுக்கும் முறைகளை உடனே பின்பற்ற வாய்ப்பு ஏற்படும். மேலும், நோய் தாக்கத்தால் ஏற்படும் இழப்புகளை தவிர்க்க முடியும் என்று கூறினார்.

இந்த நோய் கண்டறியும் உபகரணத்தை இந்தியன் கவுன்சில் ஆஃப் அக்ரிகல்சுரல் ரிசர்ச்சின் பார்லிமெண்டரி ஸ்டேண்டிங்க் கமிட்டி வெளியிட்டது. ஸ்பாட் ஆக்ளுடினேசன் கிட்டின் விலை ரூ.12/- (அமெரிக்க டாலர் 0.18 யூரோ. 0.15) ஸ்பாட் எலிசா கிட்டின் விலை ரூ.42/- (அமெரிக்க டாலர் 0.65 யூரோ. 0.54) இவை கிடைக்குமிடம் சட்டீஸ்காரைச் சேர்ந்த அகர்வால் டிரேடிங் கம்பெனியிலாகும். சி.ஐ.எஃப்.எ.வின் ஆலோசனையுடன் செயல்படும் இந்த நிறுவனம் இந்த கருவிகளை நாடு முழுவதிலும் விற்பதற்கான அனுமதி பெற்றுள்ளது. இந்திய மீன்பிடிப்பகுதி களில் வளரும் மீன்கள் அதிக அடர்த்திமிக்க பகுதிகளில் இருப்பதால், பாக்டீரியா தாக்குதல் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. நோய்த்தாக்கம் அதிகமாகும் போது சேதாரம் அதிகமாவதால் உற்பத்தி குறையும் நிலை உருவாகிறது.

இந்த கருவியை உருவாக்கும் கம்பெனிக்கு இதனை இந்தியாவில் மட்டுமே விற்பனை செய்ய அனுமதி உள்ளது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாது என்று சுவைன் கூறினார். பலதரப்பட்ட மீன் வகைகளும், அதிகமான மீன்வளமும், உள்ளதால் பாக்டீரியா மற்றும் ஒட்டுண்ணிகளின் தாக்கம் மற்றும் வைரல் கிருமிகள் ஏற்படும் சூழல் உருவாகி விடுகிறது.. எனவே விவசாயிகள் அடிக்கடி தொழில் நுட்ப உதவிக்காக பலரையும் நாடும் நிலை ஏற்பட்டு விடுகிறது.

சி.ஐ.எஃப்.எ.வின் கருத்துப்படி இந்திய மீன் வளர்ப்பில் ஏற்படும் முக்கியமான நோய்கள் அல்சர், சிவப்பு நோய், செப்டிசேமியா, ஏரோமோனியாசிஸ் மற்றும் செதில் நோய் போன்றவையாகும். சிவப்பு நோய் என்பது பொதுவானதாகும். ஆண்டுமுழுவதும் உருவாகும் வாய்ப்புள்ளதாகும். மற்றுள்ள பாக்டீரியா நோய்கள் குளிர்காலத்தில் ஏற்படுவதாகும்.

# உடுப்பியின் தொட்டி மீன் வளர்ப்பு அரசிற்கு ஒரு முன்மாதிரி

வீட்டுக்கு வீடு தொட்டியில் மீன் வளர்க்கும் வெற்றிகரமான முறையைப் பின்பற்ற கர்நாடகா மாநில மீன் வளர்ச்சி இயக்குனரகம் திட்டமிட்டுள்ளது.

முதற்கட்டமாக நான்கு மீட்டர் நீளம் நான்கு மீட்டர் அகலமுள்ள 100 தொட்டிகளில் வீடுகளில் மீன் வளர்க்கும் முறை அறிமுகமாகவுள்ளது. கடந்த சில வருடங்களாக தேர்வு செய்த சில மீன்களை கடல் பகுதிகளில் வளர்க்கும் முறை வழக்கத்தில் இருந்து வருகிறது. இந்த தொட்டியில் மீன் வளர்க்கும் முறையை மக்களிடம் பிரபலப்படுத்துவதன் மூலமாக மக்களின் சொந்தத் தேவையைப் பூர்த்தி செய்யவும், மேலும் அதிகப்படியாகும் மீன்களை மற்றவர்களுக்கு விற்கவும் இயலும்.

இதனால் மீனிற்காக மார்க்கெட்டுகளை நம்பி இருக்கும் நிலை மாறி மக்கள் தங்களுக்குத் தேவையான ரகங்களை வளர்த்துக் கொள்வர். நிதி மற்றும் தொழில் நுட்ப உதவியை அரசு வழங்கும் என்று மீன்வளர்ச்சித்துறை செயலர் கோவிந் ஜெய்ஸ்வால் கூறினார். மேலும் தேசீய மீன்வளர்ப்பு அபிவிருத்தி வாரியத்தின் உதவியும் கிடைக்கும் என்றும் கூறினார்.



சுத்த நீர்வளர்ப்பில் கிடைக்கும் மீன்கள் இந்த சோதனை முயற்சிக்கு உதவியாக இருக்கும்.மீன் வித்து மற்றும் தீவனங்களைக் கொள்முதல் செய்ய என்.எஃப்.டி.பி. மற்றும் சி.எம்.எஃப்.ஆர்.ஐ. உதவும். கோவாவின் எல்லா பகுதிகளிலும் இந்த வாய்ப்பு கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் கூறினார்.

## கிளாம் பதப்படுத்தும் முறை செயல்படுத்தப்பட்டது

கேரளத்தில் வீடுகளில் சிறிய அளவில் மீன் வளர்பவர்களுக்கு கிளாம் பிக்கிங் மற்றும் பதப்படுத்தும் முறை செயல்படுத்த ஏற்றதாகும். ஐ.சி.ஏ.ஆர்.- சி.ஐ.எஃப்.டி. கொச்சியின் சரியான நேரத்தில் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, பப்ளிக் பிரைவேட் பார்ட்னர்ஷிப் (பி.பி.பி) மூலமாக பெரும்பாலம் பஞ்சாயத்து மற்றும் ஹரிதா ஃபார் மர்ஸ் கிளப், பெரும்பாலம், உதவியுடன் இதனை செயல் படுத்தியுள்ளது.



இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை இதற்கு நிதி உதவி செய்தது. பெரும்பாலத்தில் அமைந்துள்ள இந்த திட்டம் முதன் முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 200 மீனவக் குடும்பங்கள் இதனால் பயன் பெறும். தங்களின் வாழ்வாதாரத்திற்காக கிளாம் பிக்கிங் மற்றும் புராசசிங் முறையை அந்த கிராம மக்கள் பின்பற்றி வருகின்றனர்.

இந்த திட்டத்தை இந்த நிலையம் சோதனை முயற்சியாக 2010ல் கிளாம் பிஷ்சர்ஸ்சின் முறையை விஞ்ஞான முறைப்படி வகைப்படுத்தி செய்யப்பட்ட ஆய்வு இப்போது வீடு சார்ந்த முறையில் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் மே 2015ல் துவங்கப்பட்டது.

முதல் நிலையில் மீனவப் பெண்கள் மற்றும் மீனவர்களின் குழுக்கள் உருவாக்கப்பட்டது. இவர்களுக்கு கிளாம் பிக்கிங் தகுந்த முறையில் பயிற்சி வழங்கப்பட்டது. அடுத்த நிலையில் கிளாம் புராசசிங் முறை கையாளப்பட்டது. இதில் சுகாதார முறைப்படி மீன்களைப் பதப்படுத்தி அறுவடை செய்யும் முறைகள் கற்பிக்கப்பட்டன.

கிளாம் புராசசிங் முறையை முனைவர்.சி.என்.ரவிசங்கர், இயக்குனர், ஐ.சி.எ.ஆர்– சி.ஐ.எஃப்.டி. கொச்சி, ஜனவரி 8,2018ல் துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சிக்கு திரு.கே.எஸ். சிபு, தலைவர், பெரும்பாலம் பஞ்சாயத்து தலைமை வகித்தார். வார்டு உறுப்பினர்களான முனைவர்.நிகிதா கோபால், முதன்மை ஆய்வாளர், இந்த திட்டம் தொடர்பான விளக்கங்களை வழங்கினார். திரு.பி.டி.சஜீவ், திருமதி. ஷோபனா சக்ரபாணி, திரு.கே.எ.ஜெயக் குமார், மற்றும் பெரும்பாலம் காயர் சொசைட்டி தலைவர் திரு.பி.டி.அஜயன், ஆகியோர் வாழ்த்துக் கூறினர். திரு.எஸ்.ஸ்ரீஜித், விஞ்ஞானி, கூட்டத்தினரை வரவேற்றார். திரு.அனூப் ராஜ், ஹரிதா ஃபார்மர்ஸ் கிளப் நன்றி கூறினார்.

# ஐ.சி.எ.ஆர். - சி.ஐ.எஃப்.டி.யின் நவீன குளிர்சாதன நடமாடும் மீன் விற்பனை நிலையம் அறிமுகம்



ஐ.சி.ஏ.ஆர். - சி.ஐ.எஃப்.டி குளிர்சாதன வசதியுடன் கூடிய நட மாடும் மீன் விற்பனை நிலையத்தை அறிமுகம் செய்துள்ளது. இதனால் சுகாதாரமான, சிறிய அளவு விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் பயனடைவர். இதிலுள்ள முக்கியமான அம்சம் குளிரூட்டும் சேமிப்பு அறை மற்றும் எடுப்பான முறையில் மீன்களை வாங்குவோரைக் கவரும் விதத்தில் காட்சிப்படுத்துவதாகும். கைகளால்செதில் களைக் சீவும் முறை, மீன்களை சுத்தம் செய்யும் பகுதி போன்றவை வாஷ் பேசின் மற்றும் தண்ணீர்த் தொட்டி, கழிவுகளைக் கொட்டும் வசதியுடன் அமைக்கப்பட்டிருக்கும்.

இதில் மீன்களை வெளியிலிருந்தே வாங்குவோர்கள் கண்ணாடி மறைப்பிற்குள் இருப்பதைப் பார்த்து தங்களுக்குத் தேவையானதை தேர்வு செய்ய இயலும். கூடுதலாக இதில் மீனிலுள்ள செதில்களைக் களைந்து, வெட்டி, சுத்தம் செய்து பேக்கிங் செய்யும் வசதியும் அமைக் கப்பட்டுள்ளது. நல்ல முறையில் பராமரிக்கப்படும் நிலையில் இதில் வைக்கப்படும் மீன்கள் நான்கு முதல் ஐந்து நாட்களுக்கு



கெடாமல் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அமைப்பின் விலை ரூ.80,000/- ஆகும். ஜி.எஸ்.டி. அடங்கிய இந்த விலையானது சிறிய அளவு மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு ஏற்ற விலையாகும்.

இந்த கியாஸ்க்கை ஜனவரி 2, 2018ல் ஐ.சி.எ.ஆர்.-சி.ஐ.எஃப்.டி. எர்ணாகுளத்தி லுள்ள திருப்பூனித்துராவில் புதியகாவு எனும் இடத்திலுள்ள பாவங்குளங்கரா சந்திப்பிலுள்ள V கோல்ட் ஸ்டோரேஜ் & பிஷ் செண்டரில் துவங்கப்பட்டது. இதனை துவக்கி வைத்தது திருமதி.சந்திரிகா தேவி, முனிசிபல் தலைமை, திருப்பூனித்துரா ஆகும். இந்த நிகழ்வின்போது முனைவர்.சி.என்.ரவிசங்கர், இயக்குனர், ஐ.சி.எ.ஆர்-சி.ஐ.எஃப்.டி. பேசும்போது இந்த நவீனமயமான தொழில்நுட்பம் நிறைந்த அமைப்பை உருவாக்கிய விஞ்ஞானிகளின் அர்ப்பணிப்பை நினைவு கூர்ந்தார். இதனால் மக்களுக்கு சுகாதாரத்துடன் பாதுகாப்பான ஒரு உணவு கிடைப்பது மட்டுமின்றி, நல்ல தரத்துடன் கெட்டுப்போகாத, அதிக நாட்கள் நீடித்திருக்கக் கூடிய மீன்கள் கிடைப்பது சாத்திய மானது. இதன் முதல் விற்பனையைத் துவக்கி வைத்த முனைவர்.ரவிசங்கர் பேசும் போது, இந்த நவீன முறை காரணமாக, பழைய மீன் வாங்கும் முறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, பொது மக்களுக்கு புத்தம் புதிய, பாதகமற்ற தரமான மீன் வகைகள் கிடைப்பது உறுதி என்று கூறினார்.

# அவலமான இறால் நிலை குறித்து இறக்குமதியாளர்கள் அச்சம்



தற்போதைய நிர்வாகம் மற்றும் ஒரு சிலரின் வர்த்தகத்திலுள்ள பிரச்சனைகளில் கவனமின்மை காரணமாக, அமெரிக்காவிலுள்ள உணவகங்கள் மற்றும் ரீடைல் விற்பனையாவும் மோசமான இறால் காரணமாக பாதிப்பு ஏற்படலாம் என்று இறக்குமதியாளர்கள் அச்சப்படுகின்றனர்.

செனட் பஜ்ஜெட் பில், எஸ்.பி.1662ல் ஒரு இணைப்பு பிற்பகுதி உள்ளது. அது நடைமுறைக்கு வந்தால் அமெரிக்காவின் இறால் வர்த்தகம் 30 நாட்கள் அவகாசத்தில் புதிய தேவைகளைச் மேற்கொள்ள வேண்டிவரும். தற்சமயம் இறால் எதிர்காலத்தை முன்னுணரும் தன்மையிலிருந்து விதிவிலக்கு பெற்றுள்ளது.

இறால் இந்த நாட்டின் மிக முக்கியமான உணவாகும். ஒவ்வொரு அமெரிக்கரும் ஒரு வருடத்திற்கு நான்கு பவுண்டு இறால் உட்கொள்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 90 சதமும் இறக்குமதி செய்யப்படுவதாகும். இந்த வருடம் நவம்பர் இறுதிவரை கடந்த ஐந்தாண்டுகளில் 93.4 மில்லியன் பவுண்ட் வளைகுடா நாடுகளிலிருந்து இறங்கியுள்ளது. அதேசமயம், டிசம்பர் மாத இறக்குமதி தெரியாத நிலையில் 1.3 பில்லியன் பவுண்டுகள் இறக்குமதியானது சாதனையாகும்.

எனவே, அமெரிக்காவின் இறால் தேவையின் ஏழு சதவீதம் வளைகுடா தருகிறது. இந்த நிலையில் மிஸ்சிசிப்பி சென். தாட்கோரன் செனட் பட்ஜெட் பில்லில் ஒரு இணைப்பு பிற்பகுதியை அறிமுகப்படுத்தியதன்படி என்.எம்.எஃப்.எஸ். 30 நாட்களுக்குள் கடல் உணவு இறக்குமதி கண்காணிப்பு திட்டத்தின் கீழ் இறாலைக் கொண்டுவர வேண்டும் என்பதாகும்.

எஸ்.ஐ.எம்.பி. கடல் உணவு இறக்குமதியாளர்களை பத்து வித்தியாசமான நிலைகளைப் பின்பற்ற வேண்டும் என்று கூறியுள்ளது. இதன்படி, மீன்பிடிப் படகு, மீன்பிடித்தலுக்கான அனுமதி, அறுவடை செய்வதற்கான உரிமம், பவுண்ட்ஸ், முதலில் வாங்குபவரின் பெயர், புராடக்ட் ஃபார்ம், அறுவடை செய்யும் முறை, பண்ணை, மற்றும் இதரவுள்ள ஐ.யு.யு. மீன்பிடித்தலுக்கு எதிராக, அமெரிக்க கன்ஸ்யூமர்களைப் பாதுகாக்கும் கோட்பாடுகள் அடங்கியது.

என்.எஃப்.ஐ. என்.ஓ.எ.எ.வை எதிர்த்து வழக்கொன்றை பதிவு செய்துள்ளது. இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகள் கூடுதலானது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக அளவில் ஐ.யு.யு. மீன்பிடி முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் முன்னிலை வகிக்கும் ஐரோப்பா, இறக்குமதி கொள்கைகளில் சில விதி முறைகளைத் தளர்த்தியுள்ளது. நியூசிலாந்து, போன்ற நாடுகளுக்கு விதிகளைத் தளர்த்தி, பாதுகாப்பான முறையில் விநியோகம் செய்ய அனுமதித்துள்ளது.

அமெரிக்கா இதுபோலன்றி, அனைத்து கடல் உணவு வகைகளும் விதிமுறைகளுக்கு உட்பட்டு இருந்தாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது. அமெரிக்காவிற்கான விதிமுறைகளுக்குட்பட்ட முக்கியமான மீன் வகைகள் ட்யூனா, (அனைத்து வகைகளும்) காட், கிராப், மற்றும் சினாப்பர்.

இந்த திட்டத்தின் வளர்ச்சியில் இறால் குறிப்பாக தவிர்க்கப்பட்டு விடும். ஏனென்றால் இதனை ஆய்வுசெய்தவர்கள் விதிமுறைகளை செயல்படுத்தும் போது இறாலில் ஏற்படும் சிக்கல் பற்றி எடுத்துக் கூறியுள்ளனர். என்.ஓ.ஏ.ஏ.யின் கூற்றின் படி இறால் மற்றும்

அபோலோன் ஆகிய இரண்டு ரகங்களுக்கும் மேற்கொண்டு ஆய்வு நடத்தாமல் எஸ்.ஐ.எம்.பி. தேவைப்படும் டேட்டாக்கள் தேவைப்படாது என்று குறிப்பிட்டுள்ளது.

செனட்டின் இணைப்புபிற்பகுதி இந்த முடிவை மாற்றி அமைத்து 30 நாட்களுக்குள் இறாலை இந்த திட்டத்திற்குள் கொண்டு வரும்.

என்.ஓ.எ.ஏ, சம்மதித்தால் அது இறக்குமதிக்கு தடை விதித்தது போலாகும். சாதாரணமாக இது போன்ற திட்டங்களைச் செயல் படுத்த 24 முதல் 36 மாதங்கள் தேவைப்படும். ஏனென்றால் விநியோகத் தொடர் முழுவதிலும் புதிய சாப்ட்வேர்களை உருவாக்கி, புதிய அமைப்பை ஏற்படுத்த வேண்டும். மேலும் இதில் ஈடுபட்டுள்ள படகு வைத்திருப்பவர்கள் வரை புதிய வரைமுறைகள் குறித்துள்ள விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இப்போதுள்ள எஸ்.ஐ.எம்.பி.யின் டைம்டேபிள் கூட செயல் படாது போகும். மூன்றாண்டு திட்ட காலத்தில், திட்டத்தை உறுதி செய்ததிலிருந்து ஒரு வருடத்திற்குள் சில நூறு லோடுகளை மட்டுமே இந்த ஆண்டு ஜனவரி 1 வரை எட்ட முடிந்தது. இதனால் என்.ஓ.ஏ.ஏ. ஒரு பொதுவான தளர்வை இந்த ஆண்டு துவக்கத்தில் ஏற்படுத்தியுள்ளது. என்.ஓ.ஏ.ஏ. வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை சரி செய்து, அமெரிக்காவிற்கு ஏற்றுமதியைத் தொடரச் செய்ய முயற்சிக்கிறது.

ஒரு நாடு இறால் இறக்குமதிக்கு தடை விதிக்கும் போது என்ன விளைவுகள் ஏற்படும் என்பதற்கு உலக அளவில் ஒரு எடுத்துக்காட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு ஜனவரியில் ஆஸ்திரேலியாவில் குயின்ஸ்லேண்டில் இறால் உற்பத்தியில் ஒயிட் ஸ்பாட் தாக்கம் ஏற்பட்டபோது, ஒரு விவசாயி இறால் இறக்குமதிக்குத் தடை விதிக்க வேண்டும். இதனால் வைரஸ் பரவுகிறது என்ற கருத்தை முன் வைத்தார்.

வளைகுடா நாடுகளிலுள்ள இறால் வர்த்தகம் இதனை வேறுவிதமாகப் பார்க்கின்றது. சதர்ன் ஷிரிம்ப் அலியன்ஸ் நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளர் குறிப்பிட்டது போல் அமெரிக்காவில் பிடிக்கப்பட்ட இறால்களை ஆய்வு செய்து பார்த்தால் இறக்குமதி செய்யப்பட்ட இறால்களுக்கும் அமெரிக்க மீன்களுக்குமிடையே வேறுபாடு இல்லை என்பதால் இதுபோன்ற நிபந்தனைகள் தேவையற்றதாகும். எனவே இப்போது விதிக்கப் பட்டுள்ள விதிகள் அனைத்தும் நடைமுறையாக ஆண்டுகள் பலவாகும் என்பதே உண்மை.

# மதிப்பூட்டப்பட்ட மீன் உற்பத்தி பயிற்சி

எனது லாபம் எனது மதிப்பு (Mera Gaon Mera Gaurav) என்ற திட்டத்தின் அடிப்படையில் மதிப்பூட்டப்பட்ட மீன் பொருட்கள் என்ற தலைப்பில் ஒரு பயிற்சி வகுப்பு ஜனவரி 10, 2018ல் திருச்சூரில் நடைபெற்றது. திரு.சி.கே. வினோத், தலைவர், செருபு கிராம பஞ்சாயத்து, இந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியின் துவக்க விழாவில் திருமதி.சி.ஆர்.லிஷா, திட்ட ஒருங்கமைப்பாளர், மீன்வளத்துறை, திருச்சூர், பார்வையாளர்களை வரவேற்றார். திருமதி. சுஜிதா காலித், துணைத் தலைவி, செருபு பஞ்சாயத்து தலைமை வகித்தார். முனைவர்.நிகிதா கோபால், முதன்மை விஞ்ஞானி, ஐ.சி.எ.ஆர். சி.ஐ.எஃப்.டி கொச்சி மற்றும் குரூப் லீடர், எம்.ஜி.எம்.ஜி. டீம் இந்த பயிற்சியின் குறிக்கோள் குறித்து விளக்கமளித்தார். திரு. ராமகிருஷ்ணன், மீன்வள ஒருங்கிணைப்பாளர், செருபு பஞ்சாயத்து, நன்றி கூறினார்.



*திரு. சி.கே. வினோத் நிகழ்ச்சியைத் துவக்கி வைக்கின்றார்*

ஐ.சி.எ.ஆர். சி.ஐ.எஃப்.டி. உறுப்பினர்களாக முனைவர்.பி.முகமது அஷ்ரப், முதன்மை விஞ்ஞானி, திருமதி.எஸ்.ஜே. லாலி மற்றும் முனைவர்.கே.இளவரசன், விஞ்ஞானி, திரு.நோபி வர்கீஷ், மற்றும் திரு.கே.பிரபு, டெக்னிக்கல் அசிஸ்டண்ட், ஆகியோர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து பயிற்சியின் போது மீன் கட்லட், பிஷ் பால்ஸ், பிஷ் பிங்கர்ஸ், மற்றும் பிரட்டட் இறால் போன்றவை செய்து காட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து பார்வையாளர்கள் கேட்ட கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு உரிய விளக்கம் தரப்பட்டது.

www.mpeda.gov.in

# There's no seafood as Irresist ble as Indian Seafood



From the sparkling Indian seas comes the finest seafood in the world. Enjoy it in abundance throughout the year.

*You haven't tasted the best seafood, if you haven't tasted Indian seafood.*




**The Marine Products Export Development Authority**

(Ministry of Commerce & Industry, Government of India)

MPEDA House, Panampilly Avenue, Kochi - 682 036, Kerala, India

Phone: +91 484 2311979 Fax: +91 484 2313361 E-mail: ho@mpeda.gov.in